www.tamilarangam.net

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE . FRANCE

# தூண்டில்



TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR.27

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# வாசகர

கலம் 25இல் வெளியான நா. நிருபாவின் கவிதை ஓர் உத்வேகத்துடன் முன்னேறத் தூண்டியது. எனக்குள் ஓர் எரிமலை வெடித்து. ஆனால் பின் அட்டையில் பிரசுரமாகியிருந்த 'விஞ்ஞானம் கவிதையை வாசித்ததும் எல்லாம் பொசுக்கென்று அணைந்து விட்டது.

மனிதர் சிந்தித்ததன் விளைவுதானே இன்று இருக்கின்ற விஞ்ஞான யுகம். சிந்தனைகளைப் பயன்படுத்தத் தயங்கியோ அல்லது தன்னம்பிக்கையற்று இருட்டில் வாழ்ந்துகொண்டு 'விஞ்ஞானமே வாழ்வுக்கு விடியலைத் தா' என்று புலம்பி என்னபயன்?

'ஓடிவரும் குழந்தையின் உச்சி முகர்வுக்காக ஏங்கிஏங்கி ....' என்ற கலைச் செல்வனின் கவிதை வரிகள் ஆயிரம் அர்த்தங்களை உள்ளடக்கியிருந்தது.

'பெண்களும் வாழ்க்கையும்' என்ற கட்டுரையை எழுதிய கட்டுரையாளர் எந்த நூற்றூண்டில் வாழ்கிறாரோ தெரியவில்லை. திருமணம் பற்றி அவர் குறிப்பிடுகையில் 'இரு மனங்களும் புரிந்துணர்வினால் தமக்கென்றொரு வாழ்க்கையைச் சட்டப்படி அமைத்துக்கொள்வது' என்கிறார். புரிந்துணர்விருந்தால் சட்டம் எதற்கு? சம்பிரதாயம் எதற்கு? சட்டம், சம்பிரதாயம் எல்லாம் பணத்தை அடிப்படையாக கொண்ட திருமணங்களுக்குத்தானே அவசியம்? அங்குதான் பாதுகாப்பு அவசியமாகிறது.

இன்றுள்ள நிலைமையில் – 'பெண் அடிமை' என்பது பணம் கொடுத்து திருமணம் செய்தல், பெண்ணே குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டியிருத்தல் போன்றவைகளை குறித்து நிற்கிறதே தவிர கட்டுரையாளர் குறிப்பிட்டவற்றை அல்ல. அவையெல்லாம் எப்போதோ நடந்தவை.

இன்றுள்ள நிலைமை வேறுதான். ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவான திருமணத்திற்குக்கூட பெண் மட்டுந்தான் பணம் கொடுக்க வேண்டியுள்ளது. இது ஆண்கள் கூட்டுச் சேர்ந்து பெண்களை முட்டாளாக்கிய செயற்கைத்தனம். இதேபோல் இருவரும் சேர்ந்து இன்பம் அனுபவிக்க பெண் மட்டும் தனியே குழ

www.tamilarangam.net



# கடிதங்கள்

ந்தையைச் சுமந்து பெற்றெடுக்க வேண்டியுள்ளது. இது இயற்கை பெண்களுக்கு வழங்கிய துரோகத்தனம்.

'கனவை மிதித்தவன்' தொடரில் 'நம்பிக்கை இல்லையென்றால் இந்தத் தீவில் வாழுறதெல்லாம் நடமாடும் பிரேதங்கள்-தான்...' என்ற அழுத்தம் நிறைந்த வசனங்கள், எழுத்துகள் நிறையச் சிந்திக்கவும், செயற்படவும் தூண்டுகின்றன. கதையினூடே உழைக்கும் மக்களின் அன்றாட வாழ்க்கைப் போராட்டங்களை ஒப்புநோக்கி எழுதியுள்ளமை வரவேற்கக்கூடியது.

-ந. பானு

ஒரு பத்திரிகையைக் கையிலெடுத்ததும் பல வாசகர்கள் ஆர்வத்துடன் படிப்பது நகைச்சுவைத் துணுக்கைத்தான் என்பது என் அனுபவம். சமீபகாலத் தூண்டில்களில் ஆரோக்கியமான சிந்தித்து, சிரிக்க வைக்கும்படியான துணுக்குகள் வெளிவருகின்றன. ஒவ்வொரு துணுக்கும் ஒவ்வொரு விதத்தில் இன்றைய சமூகமுரண்பாடுகளைச் சுட்டிக்காட்டிச் சிந்திக்கும்படி அமைந்துள்ளது.

நகைச்சுவைத் துணுக்குகள் என்ற மிகவும் கூர்மை மிக்க சக்தி மிக்க ஊடகத்தைப் பல கழிசடைப் பத்திரிகைகள் மக்களின் மனோபாவங்களைச் சீரழிக்கும்படியும், சமூக முரண்பாடுகளைத் திசைதிருப்பும்படியும் முதலாளித்துவப் பொருளாதாரமைப்புக்கு உந்துசக்தியாவும் பயன்படுத்தும் வேளையில் தூண்டிலின் இம் முயற்சி வரவேற்கத்தக்கது

-ப. வி. ஸ்ரீரங்கன்

இருளில் இருந்து கொண்டு வெளிப்படமுடியாமல் தவிக்கும் உள்ளங்களுக்கு வழிகாட்டியது - போன்று உள்ளது கலம் 25இல் வெளியான நிருபாவின் கவிதை.

காங்கேசன் கோவிந்தகுமாரின் 'விஞ்ஞானம்' கவிதையில் விஞ்ஞானத்திடம் விடியல் கேட்டுப் புலம்புகிறாரே தவிர விடிவை நோக்கிப் புறப்படுவதாகக் காட்டவில்லை. விஞ்ஞானத்திடம் விடிவு கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்காமல் விடியலை நோக்கி மனிதர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"வழக்கமா வீட்டுவேலையள் செய்து - கொண்டிருப்பியள். இண்டைக்கு சும்மா நிக்கிறியள்?."

"இண்டைக்கு சர்வதேச மகளிர் தினமாம். அதால் இண்டைக்குவிட்டிட்டு நாளையில இருந்து செய்யச் சொல்லி அவர் சொன்னவர்"

- கின்னின்கு -

களாகிய நாங்கள் புறப்படு - வோம்.

கல்யாணியின் பெண்களும் வாழ்க்கையும் என்ற கட்டுரையில் பின்நோக்கிய வாழ்க்கை- யையே எடுத்துக் காட்டியுள்ளார். முந்திய வாழ்க்கையை விட தற்போதைய வாழ்க்கையைப்பற்றியும் எடுத்துக் கூறினுல் சிறந்தது எனக் கருதுகிறேம்.

—உதயா

கலம் 26இன் அட்டைப்படத்தின் கருத்து இலங்கை அரசைப் பற்றிய, அதன் ஆட்சிசிதைந்துவிடக் கூடாதென்ற உங்கள் தவிப்பைக் காட்டுவது போன்று பிரதிபலிக்கிறது.

உங்களின் சமூகக் கொள் கையை தூண்டில் உள்ளடக்கம் பறைசாற்றினுலும், அட் டைப்படம் வேறொரு பாதையில் நீங்கள் கால் வைப்பதுபோன்று சுட்டிக் காட்டுகிறது. அதாவது சட்ட விரோத இராணுவத்துக்கு ஒரு புறம் ஆதரவு, மறுபுறம் ஆயுத பாணிகளுக்கு உதவி என்று தனக்குத் தானே 'இலங்கையரசு' நெருப்பையள்ளிக் கொட்டுவது பேடித்தனம். எனவே விழித்துக் கொள்ளுங்கள் (!) என்று இலங்கை அரசிற்கு ஆலோசனை கூறும் முதலாளித்துவ கழிசடைப் பத்திரிகைகளின் செயல் போன்று தூண்டிலும்...?

— கண்ணன்

மக்களை ஒடுக்குவதற்காக அரசு பே ற்கொள்ளும் பயங்கரவாத நடவடிக்கைகள் அந்த அரசையே திருப்பித் தாக்கு ம் என்பதாகத்தான் அட்டைப்படம் பிர சுரிக்கப்பட்டுள்ளது. அரசிற்கு ஆலோச- னை கூற அல்ல. தூண்டிலின் உள்ளடக்க த்தைப் புரிந்திருக்கும் உங்களால் அத னுடன் அட்டைப்படத்தையும் தொடர்புபடுத்திப் பார்க்க ஏன் முடியாமல் போ ய்விட்டது.

—கடலோடிகள்

அட்டைப்படம் இலங்கையிலுள்ள 'பெண்க பணிக்கூடம்' வெளியிட்ட சுவரொட்டியிலி ந்து மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்களின் பங்களிப்புகள்.

உலகில் பெண்களுக்கு ஓர் பூரண, சுதந்திர மனித அந்தஸ்து கிடைக்கவில்லையென்பதை வருடத்தில் ஒரே ஒருநாள் 'கொண்டாடப்படும்' சர்வதேச பெண்கள் தினம் நினைவுகூர்ந்து கொள்கிறது.

பெண்களுக்கும் 'வாக்குரிமை', வே லைகளில் இடம்', பிரத்தியேக சட்டங்கள் என்று கொண்டுவரப்பட்டாலும், நடைமுறையில் அவை பெரிதாக எதையும் சாதிக்காதது தெளிவாகத் தெரிகின்றதொன்றுகும். சட்டங்கள், 'சலுகைகள்' என்ற போர்வையில் சம்பிரதாயங்கள், கட்டுப்பாடுகள், மதச் சடங்குகள், அரசின் நலன்கள் என்பன பாதுகாக்கப்பட்டு பெண் ஒடுக்குமுறை புதுப்புது வடிவங்களில் பேணப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதே அப்பட்டாமன உண்மையாகும்.

அரசுகளின் அடக்குமுறைகளும், பயங்கரவாதமும் எப்படி அவற்றுக்கெதிரான எழுச்சியைத் தடுக்க முடியாமல் திணறுமோ அதைப் போலவே பெண்ணடிமைத்தனத்திற்கெதிரான போராட்டத்தையும் எந்த சக்திகளாலும் தடுத்து நிறுத்திவிடமுடியாது. சகல வித ஒடுக்குமுறைகளும் அவற்றைத் தகர்ப்பதற்கான உந்துசக்திகளாகவே இருக்கும்.

இலங்கையில் இரத்தத்தால் எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் போராட்ட வரலாற்றில் பெண்களின் தீவிர பங்களிப்பை அவதானிப்பவர்களுக்கு மேற்கண்ட கூற்றுகள் நடைமுறைப்படுத்தப்படுவதை அறிந்துகொள்ள முடியும்.

அரச இராணுவ, தமிழ் இயக்க ஆயுதபாணிகளின் வன்முறைகளைக் கண்டித்து ஆர்பாட்ட ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள்ஆகிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்ட வடிவங்களை முன்னெடுத்த அன்னையர் முன்னணியிலிருந்து, அரச, இயக்க அராஜகப் போக்குகளை பகிரங்கமாக விமர்சிக்கும் அரசியல், சமூகப் பங்களிப்பில் செயற்படுவதுவரை பெண்கள் தங்களை ஈடுபடுத்திக்கொண்டுள்ளார்கள்.

சமூகக் கட்டுப்பாடு, வழமை, மதம், கலாச்சாரம், பண்பாடு.... போன்ற காரணிகளால் பெண்களை அடக்கிக் கொண்டிருந்த ஆதிக்கவாதிகள் காலப்போக்கிலான பெண்களின் வளர்ச்சியையும், முன்னேற்றப் பாதையிலான அவர்களின் நகர்வையும் கண்டு அரண்டுபோய், தங்கள் அடக்குமுறையின் வடிவங்களை மாற்றிக்கொண்டு, இன்று ஆயுதங்களை நேரடியாகவே பெண்களுக்கு எதிராகத் திருப்பிவிட்டார்கள்.

சென்றவருடம் செப்ரெம்பர் மாதத்தில் ராஜனி திரணகம கொலை செய்யப்பட்டது பெண்களின் பங்களிப்பையும், அதேநேரம் பெண்களுக்கெதிரான வன்முறையாளர்களின் அராஜகத்தையும் - வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

சமூகத்தில் தங்களைப் 'பெரிய மனிதர்களாக' காட்டிக்கொண்டிருப்பவர்கள், வரலாறுகளில் பெயர் பதிக்க விரும்பும் 'புத்திஜீவிகள்' என்று பலரும் 'மௌனமாக' இருந்து, மறைமுகமாக ஆயுதக் கலாச்சாரத்தை வளர்த்துக் கொண்டிருக்கையில், வழக்கமாக மனிதாபிமானிகளுக்கெதிராக மேற்கொள்ளப்படும் எதிர்ப்புகளையும் பெண்களுக்கு 'விதிக்கப்படும்' தடைகளையும் மீறி இந்திய அரசின் ஆக்கிரமிப்பு, இந்திய இராணுவத்தின் அட்டூழியங்கள், இந்திய இராணுவத்துடன் இணைந்து 'கடமை' யாற்றிய ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்டி.எல்.எவ், ரெலோ, புளொட் இனதும், இவற்றுக்கு ' எதிரான ' எல்.ரி.ரி.ஈ.யினதும் அடாவடித்தனங்களைப் பகிரங்கமாகவும், துணிச்சலாகவும் விமர்சித்தது மட்டுமன்றி 'புத்திஜீவி' களின் முகமூடிகளையும் ராஜனி கிழித்துக் காட்டினார்.

ராஜனி போன்றவர்களின் இந்தரீதியான நடவடிக்கைகளுடன், ஆயுதப் போராட்டத்திலும் பெண்கள் பங்கெடுத்துள்ளார்கள். இதுவரை பல பெண் போராளிகள் களத்தில் மடிந்துள்ளார்கள். தங்கள் இயக்கங்களுக்குள்ளேயே இப் பெண் போராளிகள் அடக்குமுறைகளைச் சந்திப்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று எல்.ரி.ரி.ஈ.யின் மகளிர் பிரிவு 'சீருடையில்' 'ஆயுதபாணிகளாக' தெருக்களில் நடமாடுவதை மக்கள் 'ஆர்வமாகப்' பார்க்கும் அதே நேரத்தில், பெண்கள் சேலைதான் அணியவேண்டும், கட்டைப் பாவாடை போடக் கூடாதென்று 'தேசிய கௌர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வம்' பற்றி 'எல்.ரி.ரி.ஈ 'போதிப்பதும்' இன்னொரு பக்கத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அரச கூலிப்படைகளின் கொலை வெறியிலிருந்து மக்களைப் 'பாதுகாக்க' ஆயுதமேந்திய பெண் போராளிகள், தங்கள் போராட்ட உணர்வு தலைமைகளின் துரோகத்தனங்களால் கொலை வெறியாகத் திசை திருப்பப்பட்டதை அறிவதுடன், மக்களுக்கும், குறிப்பாகப் பெண்களுக்கும் எதிராக இயங்கும் நேரடி, மறைமுக எதிரிகளை இனம்கண்டு அவர்களை நோக்கித் தங்கள் கவனத்தை திருப்புவது பெண்களின் வளர்ச்சிப் பாதையில் ஒரு படிக்கல்லாக அமையப் போகிறது.

# பெண்கள் தினம்

1857ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி நியூயோர்க்கில் — நெசவுத் தொழில் செய்த பெண்கள் தங்கள் வேலை நிலைமைகளை முன்னேற்றுவதற்காக ஆர்பாட்டம் செய்தார்கள்.

இதனைத் தொடர்ந்து 1910ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதியை சர்வதேசப் பெண்கள் தினமாகப் பிரகடனப்படுத்தும் எண்ணம் தோற்றம் பெற்றது.

மேலும் 1911ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி பத்தாயிரத்துக்கும் அதிகமான பெண்கள் ஊர்வலத்தில் பங்குபற்றி வேலையில் பாராபட்சமின்மை, வாக்குரிமை, வேலைசெய்யும் உரிமை, உயர் தொழில்களுக்கான கல்வி வசதி, உத்தியோகபூர்வமான வேலை வாய்ப்பு போன்ற கோசங்களை எழுப்பினார்கள்.

1977ஆம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ஆம் திகதியை பெண்களின் உரிமைக்கும், சர்வ தேச சமாதானத்திற்குமான தினமாக கொண்டாடும்படி அதன் எல்லா அங்கத்துவ நாடுகளுக்கும் அறைகூவல் விடப்பட்டது.

பெண்களின் சம உரிமைக்கான போராட்டம் சில பலன்களைக் கொடுத்துள்ள போதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லும் இன்றும் கூட சமத்துவம் இன்மை அதிகளவில் உள்ளது.

உலக சனத் தொகையில் பெண்கள் 50சதவிகதத்திற்குமதிகமாவார். இவர்களில் பெரும் பகுதியினர் வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள். எனினும் உலக உற்பத்தி வருமானத்தின் மொத்த தொகையில் 10%இனை மட்டுமே பெண்கள் பெறுகிறார்கள். உலகத்தின் மொத்த சொத்தில் 1% மட்டுமே பெண்களின் கையில் உள்ளது.

சராசரியாக ஒரே தொழிலுக்கு ஆண்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தின் தொகையின்2/3 பகுதியே பெண்களுக்கு சம்பளமாக வழங்கப்படுகிறது. ஆண்களது சம்பளத் தொகையில்

## கரன்

பெண்கள் யப்பானில் 42% மும் சிங்கப்பூரில் 63% மும், இங்கிலாந்தில் 68% மும் பெறுகின்றனர்.

இயந்திரமயமாக்கல் நடைபெற்ற நாடுகளில் 1984க்கும் 1988க்கும் இடையில் வேலையில்லாத் திண்டாட்டம் ஆண்களுக்கு 9.4இலிருந்து 8.3வீதமாகிய அதேவேளை பெண்களுக்கு 12.9இலிருந்து 13.4வீதமாக அதிகரித்தது.

பெண்கள் பகுதிநேர வேலையிலேயே அதிகமாக ஈடுபடுகின்றனர். ஏனெனில் அவர்கள் தங்கள் குடும்பத்தையும் கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. குறைந்த சம்பளம், உயர்கல்விக்கான சந்தர்ப்பம் அதிகளவில் இல்லாமை ஆகியவையும் பிற காரணங்களாகும்.

சிலநாடுகளில் 80%பகுதிநேர வேலை பெண்களின் கையிலேயே இருக்கின்றது. எனினும் தலைமை தாங்கும் வேலையில் அநேகமாக ஆண்களையே காணமுடிகிறது.

உலகத்தில் 'அதிகாரத்தில்' இருக்கும் பெண்களின் விகிதம் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| மேற்கத்தைய நாடுகள் | | -8.9% |
| சோசலிஸ நாடுகள் | | -4.6% |
| லத்தின் அமெ. | " | -4.0% |
| ஆபிரிக்க | " | -2.5% |
| ஆசிய | " | -1.6% |

1979ஆம் ஆண்டில் பெண்களுக்குப் பாராபட்சம் காட்டப்படுவதை ஒழிக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தினை ஐக்கிய நாடுகள் சபையில் 99 நாடுகள் அமுல்படுத்த ஏற்றுக்கொண்டன.

1989ஆம் ஆண்டில் இவ்வொப்பந்தத்தின் பத்தாவது - 'ஆண்டு விழா'வின்போது உரையாற்றிய ஐ.நா.ச. செயலாளர் "பெண்களுக்கான பாராபட்சத்தினை முற்றாக ஒழிப்பதில் எந்த ஒரு நாடும் இதுவரை - வெற்றி காணவில்லை" என்பதை ஒப்புக் கொண்டுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரச்சினைக்குரியவர்கள்.



இந் நாட்டவர்
பார்வையில்
நாம்
பிரச்சினைக்குரியவர்கள்.

அன்றைய தரப்படுத்தலும்,
இன்றைய இந்திய ஆக்கிரமிப்பும்
இன்னும் எத்தனையோ
இப்படியே வந்துபோனாலும்
உண்மையான எதிரியை
இனங்கண்டு அதற்கெதிரான
போராட்டத்தை
முன்னெடுக்காதவரை
நாம்
பிரச்சினைக்குரியவர்தான்.

பாசிச அரசின்
பல்லாங்குழியாட்டத்தில்
என்றுமே
பகடைக் காய்களாய்
பகல் கனவுகள்
பலகண்டு
பழையவை போய்
புதியவை வந்தாலும்
நாம்
பிரச்சினைக்குரியவர்தான்.

எம் சமூகச் சாக்கடையில்
உளுத்து
ஊசிப்போன
அழுக்குள்
சலவை செய்யப்படாதவரை
நாம்
பிரச்சினைக்குரியவர்தான்.

ஆண்டுகள்
பல சென்றும்
அடிமைகளாய்
அடுப்படியிலே.
அதிலிருந்து
அடிமைத் தளைகளை
அடியோடு
அழித்திடப் புறப்படும்வரை
நாம்
பிரச்சினைக்குரியவர்தான்.

எமது பிரச்சினைகள்
பிரச்சினைகளாக
பின்பும் வந்தவழி தொடராமல்
பின்னைய
சந்ததியாவது
பிறிதொரு வாழ்வு வாழ
புதியதோர்
சமூகம் படைத்திடுவோம் வாரீர்.

ரத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கைத் தமிழ்ப் பெண்கள்

ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் 8ஆம் திகதி அகில உலகப் பெண்கள் தினமாகக் - கொண்டாடப்படுகிறது.

முக்கியமாக ஐரோப்பிய நாடுகள் இந்தப் பெண்கள் தினத்தை பெருமையுடன் கொண்டாடுவார்கள். ஏனெனில் நடக்கமுடியாதென நாம் நினைத்த மாற்றங்கள் கிழக்கு ஜேர்மெனி, ருமேனியா, செக்கோசெலவாக்கியா, போலந்து போன்ற நாடுகளில் நடந்துகொண்டிருக்கின்றன இந்த மாற்றங்களில் பெண்களினதும் பெருமளவு பங்களிப்பு இருப்பதை நாம் காண்கிறோம்.

இந்தவகையில் இந்த வருடம் இலங்கைத் தமிழ் பெண்களுக்கும் ஒரு திருப்புமுனையாகவிருப்பது தவிர்க்க முடியாதது.

சமாதானப்படையாக வந்து எங்கள் சமுதாயத்தை கேவலப்படுத்திய, கேவலமாக நடத்திய இந்திய அரசின் கூலிப் படை எங்கள் மண்ணில் இருந்து போவது மட்டுமல்ல ,இன விடுதலைக்காக தங்களைத் தியாகம் செய்துகொள்வதாக உறுதி எடுத்தவர்களில் ஆயுதம் தாங்கிய பலர் எண்ணிலடங்காத இறப்புகளுக்கும், அழிவுகளுக்கும் தமிழினத்தை நிர்ப்பந்தப்படுத்தினர் இவற்றினுல் முக்கியமாக இலங்கைத் தமிழ் தாய்க்குலம் தாங்கள் பட்ட இன்னல்களை மறக்கவோ, மறைக்கவோ முடியாது. ஏனெனில் கடந்த நாற்பது வருடங்களாக நடந்துவந்த அநியாயங்களால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே.

1948ஆம் ஆண்டு தொடக்கம் தேயிலைத் தோட்டத்தில் பெண்களும், ஆண்களும் இலங்கைப் பேரினவாத அரசாங்கத்தால் மனித உரிமைகள் மறுக்கப்பட்டு அடிமைகளாக நடத்தப்படுகிறார்கள். 1958ஆம் ஆண்டு தொடங்கிய இனக் கலவரங்களினுல் இலங்கையின் ஒவ்வொரு மூலையில் வாழும் தமிழ் பெண்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சிவசக்தி

www.tamilarangam.net

இந்தப் பாதிப்புகளால் நாம் படித்துக்கொண்ட பாடம் என்ன?

1961ஆம் ஆண்டு கச்சேரிக்கு முன்னால் கறுப்புக் கொடி காட்டிப் பாட்டுப் பாடி சத்தியாக்கிரகம் செய்யக் கற்றுக் கொண்டதா?

அடிக்கடி சிங்களப்பேரினவாதத்தால் எழுப்பப்படும் இனவாதத்தால் அடிபட்டு, உதைபட்டு, பாலியல் பலாத்காரங்கள் செய்யப்பட்டதைச் சகிக்கக் கற்றுக்கொண்டதா?

ஆயுதம் ஏந்தியவர்களுக்கு தேநீர் போட்டுக் கொடுத்து சாப்பாட்டுப் பார்சல் கட்டிக் கொடுத்து நல்ல அக்காமார்கள் என்று சேட்டிபிக்கற் எடுத்ததா? (பல அக்காமார்கள் தம்பிமார்களாலேயே சரிக்கட்டப்பட்டார்கள்.)

உயிருக்குத் தப்பியோடி உலகமெல்லாம் அடிபட்டு நாளை என்ன நடக்கும் என்பதை அறியாத நிர்ப்பந்தத்தைச் சகிக்கப் பழகியதா?

1960 - 1990:-

1960ஆம் ஆண்டு இலங்கை மக்கள் உலகத்திலேயே முதலாவதாக பெண் பிரதமர் ஒருவரைத் தெரிவுசெய்த பெருமையைத் தேடிக் கொண்டார்கள்.

ஆனால் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தனதுஇனவாதிகளுடன் சேர்ந்து கொண்டு தங்கள் ஆதிக்கத்தை எதிர்ப்பவர்களை படுபயங்கரமாக அடக்கினார். இலங்கை அரசியல் இயந்திரத்தை மக்களுக்கு எதிராக எவ்வளவு பயங்கரமாகத் திருப்பலாமோ அப்படித் திருப்பி ஆயிரத்தித் தொளாயிரத்தி எழுபத்தோராம் ஆண்டு ஜே.வி.பி. சார்பான இளைஞர்களையும், பெண்களையும் படுபயங்கரமாக கொலைசெய்து தன்செயல்களை அகில உலகரீதியாக நியாயப்படுத்தி தனக்குப் பின்னால் வந்த



"சேலைதான் கட்ட வேண்டும். முழுப்பாவாடைதான் போடவேண்டும். தேசியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று பெண்களுக்கு அறிவுறுத்துபவர்களை நான் கேட்கிறேன். வெள்ளையர்களின் உடையான நீளக்காற்சட்டை, சேட்டுப்போடும் ஆண்கள் அவற்றைத் தூக்கி எறிந்துவிட்டு கோவணத்தைதான் கட்டவேண்டும் என்று அறிவுறுத்த ஏன் முடியாமல் போய்விட்டது?"

— சின்னஞ்சு —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்கள இனவாதிகளுக்கு அரசியலை ஒரு பயங்கர விளையாட்டாக வழிவகுத்து கொடுத்தவர் அவர் தூண்டிவிட்ட கொலைவெறியுடன் இலங்கை இராணுவத்தினர் தமிழ்ப் பகுதிகளுக்கு காலடியெடுத்து வைத்தனர்.

1972ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தொடங்கிய மாணவர் பேரவையை அடக்க பண்டாரநாயக்க அனுப்பிய இனவெறி இராணுவத்தினரைக்கண்டு நடுங்கி ஓடாமல் உரிமைக்காக போராடிய தமிழ் பெண்கள் இலங்கைத் தமிழ் பெண்களின் எதிர்காலப் போராட்டங்களுக்கு முன்னோடிகளாக இருக்கிறார்கள்.

அவர்கள் எடுத்த முடிவையோ, பின்பற்றிய அரசியல்முறைகளையோ இக்கட்டுரையில் விபரிக்கவில்லை. ஆனால் அந்தக்காலத்தில் அந்தப் பெண்கள் பங்கெடுக்கத் தூண்டுதலாயிருந்த போராட்ட வரலாற்றை மறக்க முடியாது.

இறந்துவிட்ட சகோதரி ஊர்மிளா, இன்னும் அரசியல் அகதியாகத் திரியும் சகோதரி அங்கையற்கண்ணி, பொலிசாரின் கொடுமைகளுக்குள்ளாகிய சகோதரி புஸ்பராணி, இனவெறியர்களால் சிறைபிடிக்கப்பட்ட நிர்மலா, இனந்தெரியாத தம்பிகளால் (?) கொலை செய்யப்பட்ட ராஜனி என்பவர்களோடு உரிமைப் போராட்டத்தால் இறந்த, பாதிக்கப்பட்ட எத்தனையோ ஆயிரக்கணக்கான சகோதரிகளையும் நாம் மறந்துவிட முடியாது.

## சமுதாய மாற்றம்:-

சமுதாய மாற்றம் தன்பாட்டுக்கு நடைபெறுவதில்லை. சமுதாயம் என்பது மக்களால் உண்டாக்கப்படும் அவர்களின் கலை, அரசியல், பொருளாதார கல்வியறிவால் வளர்ச்சியடைவதாகும்.

தமிழ் மக்களின் விடுதலைக்கென்று சொல்லி தங்களைத் தாங்களே தலைவர்களாகவும், தளபதிகளாகவும் பிரகடனப்படுத்திக்கொண்ட அரசியல் சூனியமான ஒரு சிலரால் எங்கள் இனம் இந்திய அரசிடம் அடகு வைக்கப்பட்டபோது எட்டுவயது சிறுமி முதல் எண்பது வயதுக் கிழவிகள்வரை குரங்கு கையில் பூமாலைகளாய் கசங்கி முடிந்த கதையை சகோதரிகள் அறியாமலில்லை.

கடந்த 25 வருடமாக ஒரு மணமகனின் விலை மலைபோல் ஏறிக்கொண்டிருக்கிறது. போராட்டத்தில் ஈடுபட்டு இறந்தவர்கள் தொகை கூடிக்கொண்டிருப்பதுபோல் உயிரைப்பாதுகாக்க ஊரைவிட்டு ஓடிய இளைஞர்களும் ஏராளம்.

இந்த நிலையைப் பாவித்து தங்கள் விலையை உயர்த்திக்கொண்டு திருமணத்தை ஒரு பெரிய இலாபகரமான வியாபாரமாக்கிக் கொண்டவர்களும் ஏராளம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப் போராட்டத்தில் நாங்கள் இதுவரை எத்தனையோ உண்மைகளைப் படித்துவிட்டோம்.

எங்கள் நிலைமாற, எதிர்காலத்தில் ஒரு கௌரவமான சமுதாயத்தை உருவாக்க எப்படி உழைப்பது என்று யோசிக்காமல் எங்கள் சகோதரிகள் இருப்பார்கள் என்று கூறிவிடமுடியாது.

எங்கள் கலாச்சாரமும், சமயமும், சாஸ்திர, தோத்திரங்களும் பெண்களின் உண்மையான விடுதலைக்கு எதிர்மாறாகவே இருக்கின்றன.

பெண்களுக்கு ஒரு தனித்துவம் கிடையாது என்பதை நேரடியாகவும், மறைமுகமாகவும் வலியுறுத்தும் மேற்படியான கலாச்சாரத்தை மக்கள் (ஆண்கள்!) போற்றிப் பாராட்டுகிறார்கள். பொருளாதார நிர்ப்பந்தத்தால் பெண்களில் பலரும் இக்கோட்பாடுகளை ஒருகேள்வியும் கேட்காமல் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால் இப்படியான ஒரு பாரபட்சமான கலாச்சாரம் நேர்மையான எதிர்காலத்தை உருவாக்காது. எங்கள் குழந்தைகள் கொலைகாரர்களாகவோ கொள்ளையர்களாகவோ, கற்பழிக்கும் கயவர்களாகவோ வளரப் போவதில்லையென ஒவ்வொரு பெண்ணும் நினைப்பதே ஒரு பெரிய திருப்புமுனையாகும்.

இலங்கைத் தமிழ் பெண்கள் இந்தியத் தமிழ் பெண்களை விடப் படித்தவர்கள் என்று சில பேர் புளுகிக் கொள்கிறார்கள்.

படிப்பு என்பது பரீட்சை பாஸ் பண்ணுவது மட்டுமல்ல. அறிவு என்பது புத்தகம் படித்து மட்டும் வருவதல்ல. உலகத்தைப் படிப்பதுதான் பெரிய படிப்பு.

எங்கள் விடுதலைப் போராட்டமே எங்களுக்கு ஒரு பெரிய பாடம். அந்தப் பாடத்தை படித்தவர்கள் நவீன இலக்கியங்கள், புதுக் கருத்துகள், புதுக்கலாச்சாரம் என்பவற்றைப்படைக்க வேண்டும்.

விடுதலை இயக்கத்தினர் என்று தங்களை விளம்பரப்படுத்திக் கொண்டவர்கள் பெண்கள் விடுதலை பற்றி எந்தவிதமான அக்கறையையும் எடுத்துக்கொள்ளவில்லை. மாறாகத் தங்களுடன் சேர்ந்த பெண்களையே தங்கள் அதிகாரத்துக்குள் அடிபணிய வைத்துப் பாவித்தனர். இயக்க ரீதியாகவோ, இனவிடுதலை பற்றியதாகவோ கேள்வி கேட்ட பெண்கள் இழிவாக நடத்தப்பட்டார்கள். அந்தப் பெண்களின் சுயவுணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டன.

முடிவில்லாத பாதையுமில்லை. விடிவில்லாத இரவுமில்லை. அதுபோல் இருண்ட எங்கள் 'தற்காலம்' ஒளிவிட நல்லுணர்ச்சி கொண்ட பெண்களும், ஆண்களும் ஒன்று சேர்ந்து பாடுபடுவதைத் தவிர வேறுவழியில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்களைப் பற்றி...

பெண் விடுதலை என்ற செயற்பாடுகளின் தீவிரங்கள் தற்போது அதிகரித்து வருகின்றன இந்த வளர்ச்சியைப் போன்றே இதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகளும் புதுப் புதுத் தோற்றங்களுடன் அதிகரித்து வருவதுஒன்றும் புதுமையானதல்ல. புரட்சியும், எதிர்ப் புரட்சியும் வரலாறுகளாகிக் கொண்டிருக்கின்றன.

குடும்பங்களில் பெண் சுதந்திரம், ஆளுதிக்க விடுவிப்பு என்பதிலிருந்து மூன்றும் உலகப் பெண்களின் விடுதலை, சர்வதேசப்-பெண்கள் என்பதுவரை 'பெண் விடுதலை' என்பது பரந்துபட்டு முன்னேறிக் கொண்டிருக்கிறது.

இந் நிலையிலும் பெண்களின் நடை, உடை, பாவனைகளில் தான் கலாச்சாரம், பண்பாடு தேசியம் (?) தங்கியிருப்பதாக ஒற்றைக் காலில் நின்றுகொண்டிருப்பவர்கள் தங்கள் நிலை-யைமாற்றிக் கொண்டதாக இல்லை.

ஆண்கள், அரசு, முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், மதம். ... என்று பல திசைகளிலிருந்தும் அடக்குமுறைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கு நேரடி, மறைமுக எதிரிகளை இனம்கண்டு கொள்வதிலும் தவிர்க்க முடியாதபடி பல சிரமங்கள் எதிர்கொள்கின்றன.

இப்படியான சூழ்நிலையில் பெண்களின் (ஆண்களினதும் தான்) கவனங்களைத் திசை திருப்ப, வளர்ச்சிப் பாதையில் தடைகள் ஏற்படுத்த, முக்கிய பிரச்சினைகளைக் குழப்பியடிக்க பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் சில ஊடகங்களை, வழிமுறைகளை மட்டும் பார்ப்போம்.

## திரைப்படங்கள்

இலங்கை, இந்திய மக்களின் வாழ்வில் இன்று திரைப்படங்கள் இரண்டறக் கலந்துவிட்டன மக்களை மிகவும் பாதித்துக் கொண்டிருக்கும் இத் தொடர்பு ஊடகத்தை அரசுகளும், முதலாளிகளும் முழுமையாகவே கைப்பற்றி வைத்திருக்கிறார்கள். பிறகு கேட்கவும் வேண்டுமா, திரைப்ப

www.tamilarangam.net

டங்கள் யாரின் நலன்களைப் பேணுகின்றன? யாருக்குச் சாதகமானவையாக உள்ளன? என்று.

கடந்தகால கறுப்பு, வெள்ளைப் படங்களிலிருந்து இன்றைய சினிமாஸ்கோப், கலர்ப் படங்கள்வரை திரைப்படங்களில்

பெண்களுக்கென்று ஒரு வரைவிலக்கணத்தையே உருவாக்கி வைத்திருக்கிறார்கள். வேறு விதமாகச் சொல்லுவதானல் பெண்ணடிமை சமூகத்தைப் பிரதிபலிக்க ஒரு வடிவத்தை அமைத்துக் கொண்டுள்ளார்கள்.

வில்லன்களின் கையாட்களாக இருந்து உளவு பார்ப்பது விபச்சாரம் செய்வது, கொண்டாட்டங்கள், விழாக்களின்போது அரைகுறை ஆடையுடன் ஆடுவது, ஆண்களை களிப்படைய வைப்பது .... இப்படியெல்லாம் பெண்களைச் சித்தரித்து நேரடியாகவே சமூகத்தில் அவர்களை இழிவுள்ளவர்களாக ஆக்குவதில் திரைப்படங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

பெண்ணிடத்தில்தான் குடும்ப மானம், கௌரவம், அந்தஸ்து... என்று அடங்கியுள்ளதென்றும், இதனல் பெண்கள் வீட்டை விட்டு வெளியேறுமலும், ஆண்களுடன் பழகாமலும் கட்டுப்பாடாக அடக்கமாக இருக்க வேண்டும் என்றும், வீட்டின் அனைத்து வேலைகளுக்கும் அவளே பொறுப்பு என்றும், கணவனைத் தெய்வமாக வணங்க வேண்டும் என்றும், மற்றவர்கள் சொற்களுக்கு கீழ்படிய வேண்டுமென்றும் சித்தரித்து ஒரு குறுகிய வட்டத்துக்குள் அடக்குவதற்கும் அல்லது தெய்வமாக்கி விலக்கி வைப்பதற்கும் திரைப் படங்கள் பின்நின்றதில்லை.

காதல் தோல்வியில், அவமானம் தாங்காமல், தனியாக, குடும்பத்துடன் தற்கொலை செய்யும் பல கொலைச் சம்பவங்களுக்குத் திரைப்படங்களும் தூண்டுகோலாக இருந்து வருகின்றன.

தமிழ்ப் படங்கள் மட்டுமன்றி ஏனைய மொழிப் படங்கள்கூட பெண்களைப் பற்றிச் சித்தரிப்பதில் ஒற்றுமை காட்டிவருவதிலிருந்து இவர்களின் நோக்கம் ஒன்றே என்பதைச் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம்.

---

# பாரதி

---

ஆங்கிலப் படங்களில்வரும் வீராங்கனைகள் எல்லோரும் தங்கள் உடம்பைத் திறந்து காட்டியே 'அனைத்தையும்' 'சாதிப்பதாக' சித்தரிப்பதில் 'புகழ்' பெறுகிறார்கள். மொழி விளங்காவிட்டாலும்கூட வசூலை ஈட்டித் தருவதில் இப்படியான சித்தரிப்புகளே பெரும் பங்கு வகிக்கின்றன.

திரைப்பட விளம்பரங்களிலும் கூட 'அந்தப் பெண்ணின் — காமவெறியாட்டம், இந்தப் பெண்ணின் காமலீலைகள்' என்றெல்—



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாம் கவர்ச்சிகரமாக வசனங்கள் எழுதப்படுகின்றன.

திரைப்படங்கள்தானே என்று பலர் இவைகளைப் பற்றி அலட்டிக் கொள்ளாததால், பலர் தொடர்ந்தும் திரைப்படங்களினூடாகத் திணிக்கப்படும் பெண்களுக்கெதிரான கருத்துகளை உள்வாங்கிக் கொள்வதுடன், இத்தகைய திரைப்படங்களுக்குப் – 'பின்னால்' இருப்பவர்களுக்கு – வெற்றியையும் ஈட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.



"ஏன் நீங்கள் இன்னும் கலியாணமே செய்யேலை."

"எரிச்சலைக் கிளப்பாதைங்கோ. எத்தின சீதனம் கிடைக்காம கலியாணத்துக்கு ஓம் படமாட்டோம் என்டு அப்பாவும் அம்மாவும் சொல்லிச் சொல்லி இப்ப நாப்பத்தைஞ்சு வயசில இருந்து கொட்டாவி விட்டுக்கொண்டிருக்கிறன்"

## இலக்கியங்கள்

அந்தநாள் இராமாயணம் மகாபாரதம், தமயந்தி, சாவித்திரி புனைகதைகளிலிருந்து இன்றைய மர்மநாவல்கள் 'சீசன்' வரை இலக்கியங்கள்(?) பெண்களைப் பற்றிய தங்கள் 'கொள்கைகளை' மாற்றிக்கொண்டதாக இல்லை.

இதில் விசித்திரம் என்னவென்றால் அன்று ஆணாதிக்கவாதிகளால் அப்படியான 'படைப்புகள்' படைக்கப்பட்டன. இன்று சிவசங்கரி, இந்துமதி... என்று பெண் எழுத்தாளர்களும் 'முன்வந்து' இப்படியான 'படைப்புகளை' தந்துகொண்டிருக்கிறார்கள்.

அன்று தாசியாக இருத்தல், பணிவிடைகள் செய்தல், கணவனைக் கண்கண்ட தெய்வமாக்கல், குழந்தை பெற்றுக்கொள்ளல் மட்டும், பாலியல் பலவீனமானவர்கள், உடன்கட்டை ஏறல், செத்துத் தியாகம் செய்தல், உடற்கவர்ச்சி காட்டி ராஜாக்களை மயக்கல் அல்லது சூழ்ச்சி செய்பவளாக, அகங்காரியாக, கணவன் மேல் மரியாதை காட்டாதவளாக... போன்றவைகளுக்குத்தான் பெண்கள் என்று தங்களால் இயன்றவரை நெடுங் கதைகள், வெண்பாக்கள், 'மரபு' கவிதைகள், புராண, இதிகாசங்கள்... என்றெல்லாம் எழுதிக் குவித்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று இந்த அச்சைச் சிறிதும் மாற்றாமல் காலத்துக்கேற்ற புதுவடிவம் கொடுத்து எழுதித் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். இப்படியானவர்கள் பார்வையில் வேலைக்குப் போகும் பெண்கள் 'கற்பில்லாதவர்கள்' சுதந்திரமாக உலவும் பெண்கள் 'எதையும்' விற்கக் கூடியவர்கள், பெண்விடுதலை, மாதர்சங்கம் என்பவர்கள் வேலை வெட்டியில்லாத கோஷ்டிகள், சின்ன வீடு வைத்துக்கொள்ளல் நாகரிகம், மனைவியால் 'திருப்தி' செய்யப்படாத கணவர்களுக்கு—வேறு பெண்கள் 'திருப்தி' யளித்தால் அது தியாகம்.

இவை தவிர வாசகர்களின் காமவெறியைத் தூண்டிப் பெண்களை வெறும் பாலியல் — பொருளாக்குவதில் சாண்டில்யனிலிருந்து புஷ்பா தங்கதுரை, கேமாஆனந்ததீர்த்தன் என்று பலர் முழுமையாக ஈடுபட்டிருக்கிறார்கள். பெண் 'எழுத்தாளர்கள்' பலர் கூட இதில் சேர்த்தி(!).

வெறும் எழுத்துகள் மட்டும் போதாதென்று ஜெ., அரஸ்... என்று ஓவியர்கள் — பெண்களை வரையும்போது பெண்களுக்கு கண்ணாடி உடைகளை அணிவித்து விடுகிறார்கள். அதாவது இவர்களது ஓவியப் பெண்கள் 'உடை' அணிந்திருந்தாலும் உடல் முழுவதும் 'பளிச்' சென்று தெரியும்.

மைத்துனரும், மைத்துனியும் மாமியாரும், மருமகனும், பக்கத்துப்பக்கத்து வீட்டு கணவனும், மனைவியும்.... உடல் உறவு வைத்துக்கொள்ளும் 'செக்ஸ்' புரட்சி செய்வதில் தற்போதைய எழுத்தாளர்களில் பலர் குறியாக இருக்கிறார்கள்.

பெண்ணைக் கொடியே, பூவே, மதியே என்றும் உடலுறுப்புகளை தங்கக்கலசம், சிற்றுடை, மலைகள், மடுக்கள் என்றும் அந்தநாள் 'கவிஞர்கள்' வர்ணித்ததை கேலி செய்யும் இந்நாள் 'கவிஞர்கள்' அரக்கியே, பாறுங்கல்லே, முள்ளே கனவுலகக் கன்னியே, இரண்டு பந்துகள், முக்கோணப் பிரதேசம்.. என்றெல்லாம் 'புதுமை' யாக வர்ணித்துக் கொள்கிறார்கள். ஆண்களின் 'சோகங்களுக்குப் பின்னால்' நிற்பது பெண்களே என்பது இவர்களில் பலரின் கண்டுபிடிப்பு.

இப்படியான இலக்கியங்களும், திரைப்படங்களும் மக்களின் இரசனையை மட்டமாக்கிவிட்டு, அவை மாறிவிடாமலிருக்க, ஏற்ற 'தீனியை' தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

"மக்களின் இரசனை இதுதான். அதனால்தான் மக்களுக்காகவே இப்படி எழுதுகிறோம், இப்படித் திரைப்படங்கள் எடுக்கிறோம்" என்று இவை நியாயப்படுத்தப்படுகின்றன.

'இரசனை' யைப் பயன்படுத்தியே பெண்களை இரசனைக் குரியவர்களாக்கும் கைங்கரியங்

www.tamilarangam.net

கள் தொடர்ந்து கொண்டிருப்பதற்குக் காரணம் இலக்கியம், திரைப்படம் என்ற 'ஆயுதங்களை' 'உரியவர்கள்' எடுத்துக் கொள்ளாததும் (அல்லது எடுத்துக்கொள்ள முடியாமலிருப்பதும்), இப்படியானவை மக்களுக்கு தாராளமாக வழங்கப்பட்டுக்கொண்டிருப்பதை 'கவனத்திலேயே' எடுக்காமல், மருந்தாக அவ்வப்போதுவரும் ஒன்றிரண்டு நல்ல முயற்சிகளையும் 'விமர்சனம்' என்ற பெயரில் மறுபடி தலையெடுக்காதவாறு அமுத்துவதும்... போன்றவைகளாகும்.

விளம்பரம்

முதலாளித்துவத்தின் அரிய சாதனம் இந்த விளம்பரமாகும் 'விளம்பரமின்றேல் வியாபாரமில்லை' என்று அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள்.

வியாபாரங்களுக்கான விளம்பரங்களில் கூடப் பெண்கள் 'தப்ப'வில்லை. சுத்தம் என்பது இருபாலாருக்குமே பொதுவானது. ஆனால் உதாரணத்திற்கு பிரபல்யமான விளம்பரங்களில் ஒன்றான லக்ஸ் விளம்பரத்திற்கு சர்வதேச நட்சத்திரங்களே போஸ்கொடுக்கிறார்கள். "இப்படியான விளம்பரங்களைப் பார்க்கையில் ஆண்கள் குளிப்பதேயில்லையோவென எண்ணத் தோன்றுகிறது" என்று திசை பத்திரிகையில் ஒரு கட்டுரையாளர் வேடிக்கையாகக் குறிப்பிட்டிருந்தார்.

கார், சப்பாத்து, நாய்தீன், பற்பசை... இப்படி எந்த வகை விளம்பரம் என்றாலும் பெண்களை ஏதோ ஒரு விதத்தில் கவர்ச்சியாக்கிக் காட்டாவிட்டால் விளம்பரதாரர்களுக்கு 'திருப்தி'யே வராது.

இந்தவகை விளம்பரங்கள் தொலைக்காட்சியிலும், படமாளிகைகளிலும் காட்டப்படுகின்றன. பெரியளவு வர்ணப்படங்களாகத் தெருக்களில் ஒட்டப்படுகின்றன. ரீசேட், ஜக்கற் போன்ற உடைகளில், வாகனங்களின் வெளிப்புறங்களில் பொறிக்கப்படுகின்றன.

இந்தியாவிலிருந்து வெளியாகும் பெரும்பாலான சஞ்சிகைகள், வார, மாத நாவல்கள் ஆகியவற்றின் அட்டைகளில் நடிகைகளின் கவர்ச்சிப் படங்களே இடம்பெறுகின்றன. இதுவும் வாசகர்களிடம் தாங்கள் உருவாக்கிய இரசனையை வைத்து அவர்களிடமே வியாபாரத்தை நடத்துவதாகும்.

எனவே இனிமேல் 'விளம்பரம் இன்றேல் வியாபாரம் இல்லை' என்பதை 'பெண்கள் இன்றேல் வியாபாரமில்லை' என்று மாற்றிக்கொண்டுவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நேரடியாகச் சொல்லாவிட்டாலும் இப்போது அதையேதான் செய்துகொண்டிருக்கிறார்கள்.

நகைச்சுவைத் துணுக்குகள்

இந்தியச் சஞ்சிகைகளைப் பலர் விரும்பிப் படிப்பதற்குரிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்றைய நிலைமைகள்

வடக்கு, கிழக்கில் திருகோணமலை, யாழ் மாவட்டங்கள் தவிர ஏனைய தமிழ் மாவட்டங்களிலிருந்து இந்திய இராணுவத்தினர் வெளியேறிவிட்டனர். இம்மாத இறுதிக்குள் எல்லாப் பகுதிகளிலிருந்தும் இந்திய இராணுவம் வெளியேறிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ் ஆகிய இயக்கங்களினால் உருவாக்கப்பட்ட சி.வி.எப், ரி.என்.ஏ என்ற படைகளும் — வெளியேறி வருகின்றனர். இவர்கள் வெளியேறும்போது பலாத்காரமாகத் தம்மால் தமிழ்த் தேசிய இராணுவத்துக்கு எடுக்கப்பட்ட சிலரை வீட்டுக்கு அனுப்பிவிட்டு தமது இயக்க உறுப்பினர்களையே பெரும்பாலும் அழைத்துச் சென்றுள்ளனர். எனினும் சிலர் ரி.என்.ஏ.யைவிட்டு தப்பி ஓடிவந்து கொழும்புபோன்ற பகுதிகளிலும் காணப்படுகின்றனர்.

(தொடர்ச்சி 26ஆம் பக்கத்தில்)

காரணங்களில் அவற்றில் பிரசுரமாகும் நகைச்சுவைத் துணுக்குகள் பிரதான இடம் வகிக்கின்றன. சிலர் இவற்றை மட்டுமே படிக்கிறார்கள்.

இத் துணுக்குகள் சிரிப்பை மட்டும் வரவழைப்பதில்லை. பிற்போக்குக் கருத்துகளையும் விதைத்துவிடுகின்றன.

'வேலைக்காரிகள்' வீட்டு எஜமானனை தங்கள் காமவலையில் வீழ்த்துவதாக, அலுவலகங்களில் வேலை பார்க்கும் பெண்கள் முதலாளிகளை 'மயக்குவதாக', பேராசைக்காரர்களாக, கொடுமைக்காரர்களாக, கணவர்களைத் துன்புறுத்துபவர்களாக, உடுபிடவை, நகைப் பித்தர்களாக.... பலவிதங்களில் இத்துணுக்குகள் மூலமாகக் கேவலப்படுத்துகிறார்கள்.

ஏனையவற்றைப் போலவே சிரிப்பு என்ற சிறந்த 'ஆயுதமும்' இன்றுவரை பிழையானவர்களிடமே சிக்கியுள்ளது.

இப்படி பல வடிவங்களிலும் பெண்களுக்கு எதிரானவர்கள் 'ஒருவகையான' அமைப்பு ரீதியாகவே செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கருத்து வடிவத்தில் 'எதிர்ப்புரட்சி' நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

செயல்முறையில்வரும் அடக்குமுறைகளைப் போலவே கருத்துகளாக விதைக்கப்படும் மனிதவிரோதங்களையும் தீவிரமாக எதிர்ப்பதில் ஆண், பெண் வேறுபாடுகள் இருக்க முடியாதல்லவா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




01.02.90 (வீரகேசரி)

புலிகளால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட 27பேரும் விடுவிக்கப்படாததால் காத்தான்குடியிலும், கல்முனையிலும் கடைகள் மூடப்பட்டிருந்தன.

எல்.ரி.ரி.ஈ. காத்தான்குடியில் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்து வீடுவீடாகச் சோதனையில் ஈடுபட்டுள்ளது. சுமார் 30 முஸ்லீம்கள் காத்தான்குடியில் கைது செய்யப்பட்டுள்ளனர். எல்லாப்பாடசாலைகளும் காத்தான்குடியில் மூடப்பட்டுள்ளன. பல முஸ்லீம் சிறுவர்கள் கடத்தப்பட்டுள்ளனர். முஸ்லீம் காங்கிரசின் மாகாணசபை உறுப்பினரான மன்சூர் சம்மாந்துறையில் எல் ரி ரி.ஈ.யினரால் கடத்தப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளார். கல்முனைச் சந்தை, நகரம், பள்ளிவாசல், காத்தான்குடி கிராமம் ஆகியவற்றைச் சுற்றி வளைத்த எல்.ரி.ரி.ஈ. முஸ்லீம் பிரமுகர்கள், வாலிபர்கள், வர்த்தகர்கள் ஆகியோரைக் கடத்திச்சென்றுள்ளது. —தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பு.

ஆயுதங்களை வைத்திருக்கும் முஸ்லீம்இளைஞர்கள் அவற்றைக் கையளித்து சரணடையுமாறு விடுதலைப்புலிகள் ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோள் விடுத்தனர்.

"கல்முனையைச் சுற்றி வளைத்து தேடுதல்களை மேற்கொள்ளும் புலிகள் 25பாடசாலை மாணவர்களைக் கைது செய்து கட்டிச் சென்றுள்ளனர். கல்முனைச் சந்தைப் பகுதியில் 15 வர்த்தகர்களும் புலிகளினால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் அரசியற்குழு உறுப்பினரான மருதூர் கனி புலிகளினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். அவர் வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்டதைக் கண்ட பிள்ளைகள் கதறியழுதபோது, அறிக்கையொன்றை விடுத்ததற்கான பரிசு இது என புலிகள் கூறியுள்ளனர்." — பாராளுமன்றத்தில் அஷ்ரப்

"இந்த அரசாங்கத்தின் பூரண ஆதரவோடு விடுதலைப் புலிகள் முஸ்லீம்களின் தனித்துவத்தின் மீதும், உரிமைகள் மீதும் மிலேச்சத்தனமான அத்துமீறல்களைச் செய்து வருகின்றனர்." —பாராளுமன்றத்தில் இஸ்புல்லா.

02.02.90 (டெய்லி நியூஸ்)

கைது செய்யப்பட்ட முஸ்லீம்களை விடுவிக்கக் கோரி முஸ்லீம் மக்கள் கல்முனையில் உள்ள புலிகளின் அலுவலகத்திற்கு முன்பு ஊர்வலம் நடத்தி எதிர்ப்பு தெரிவித்தனர். இதன்போது புலிகள் துப்பாக்கி பிரயோகம் செய்ததனால் 17பேர் காயமடைந்தனர். இவர்கள் கல்முனை ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர். இதனையடுத்து இவ்வாஸ்பத்திரியைச் சுற்றிவளைத்த புலிகள் அங்கு அனுமதிக்கப்பட்டிருந்த 5 நோயாளிகளைச் சுட்டுக் கொன்றதுடன் ஒரு வைத்தியர் உட்பட 10



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேரைக் கடத்திச் சென்றனர்.

02.02.90 (ஐலண்ட்)

மட்டக்களப்புக்குள் பிரவேசிக்கும் வாகனங்களுக்கு மாவடி பாலத்தில் வைத்து எல்.ரி.ரி.ஈ.யினால் வரி அறவிடப்படுகிறது. தனியார் பஸ்கள், லொறிகளுக்கான வரி 200/- ரூபா, வான்களுக்கும், மோட்டார் சைக்கிள்களுக்கும் 50/-ரூபா. இப் பாலத்தினூடாகச் செல்லும் புகையிரதங்களும் எல்.ரி.ரி.ஈ.யினால் தடுத்து நிறுத்தப்பட்டு சோதனையிடப்படுகிறது.

கேகாலையிலும், அநுத்கமவிலும் இராணுவத்தினரால் 5பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

02.02.90 (வீரகேசரி)

கல்முனைப் பகுதியில் புலிகளால் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக்கோரி ஆர்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. இவ்வூர்வலத்தின் மீது கிரனேட் வீசப்பட்டதால் 2பேர் கொல்லப்பட்டு, 7பேர் காயமடைந்தனர்.

04.02.90 (வீரகேசரி)

சுதந்திர தின வைபவங்களை தமிழ்தேசியசபை பகிஷ்கரிக்கவில்லையென அதன் அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

05 02.90 (வீரகேசரி)

வடக்கு-கிழக்கில் இலங்கை பொலிஸ் அமைப்பைச் செயற்படுத்துவதற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர். வடக்கு - கிழக்கில் சமாதானத்தையும், சகஜ நிலையையும் மீண்டும் கொண்டுவர சகல வழிகளிலும் இலங்கை அரசுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குகிறோம். -தமிழீழ விடுதலைப் புலிகள்.

06.02.90 (வீரகேசரி)

இந்தியக் கடவுச்சீட்டுப் பெற்று இந்தியா திரும்ப முடியாமல் 80,000 தோட்ட தொழிலாளர்களும், இந்தியக் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்த நிலையில் 80,000 தோட்டத் தொழிலாளர்களும் 'இங்கும் இல்லை, அங்கும் இல்லை' என்ற நிலையில் பல ஆண்டுகளாக இலங்கைப் பிரஜாவுரிமையையும் பெறாது, இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலையிலும் வாழ்ந்து வருகின்றனர்.

06.02.90 (ஐலண்ட்)

வெல்லாயாவில் எஸ்.ரி.எப் 5பேரைச் சுட்டுக் கொன்றது.

ஒரே குடும்பத்தில் 4பேர் வெட்டிக்-கொல்லப்பட்டனர்.

இலங்கையின் 'யாழ்ப்பாண தேசபக்தர் அவை' தமிழ்நாட்டில் நடாத்திய கூட்டத்தில் எல்.ரி.ரி.ஈ.யையும், ஈ.பி.ஆர்.எல்.எவ்.வையும் அவற்றின் தேசிய விரோத, ஐனநாயக எதிர்ப்பு, பயங்கரவாத நடவடிக்கைகளுக்காகக் கண்டித்துள்ளது.

07.02.90 (டெய்லி நியூஸ்)

கொட்டியகலையில் எஸ்.ரி.எப்பால் 2 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

07.02.90 (வீரகேசரி)

அக்கரைப்பற்று பகுதியில் கனிபா என்ற வாலிபர் இனந்தெரியாதோரால் சுட்டு கொல்லப்பட்டார். இவர் கடையில் இருந்தவேளை ஆயுதம் தாங்கிய கோஷ்டியொன்று பணம் தருமாறு மிரட்டியதாம். அவர்களுடன் இவர் வாதிட்டபோதே சுட்டுக் கொல்லப்பட்டார்.

"இன்றைய சூழ்நிலையில் தொலைபேசிச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சேவை எம்மக்களுக்கு ஒரு அத்தியாவசியமான சேவையாகும். இச்சேவை ஒரளவுக்குச் செயற்பட ஆரம்பிக்கையில் இதனைச் சீர்குலைக்க முனைவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" -விடுதலைப்புலிகளின் அரசியற் பிரிவு பொறுப்பாளர்.

08.02.90 (சன்)

அம்பாறையில் உன்னிச்சைப் பகுதியில், ஈ.பி.ஆர்.எல்.எவ். முகாம் மீது எல்.ரி.ரி.ஈ. தாக்குதல் நடத்தியதில் 3 ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பியோடினர். ஈ.பி.ஆர்.எல்.எவ்.வின் எதிர்தாக்குதலில் 16 எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

பொத்துவிலில் நடந்த தாக்குதலில் 7 ஈ.பி.ஆர்.எல்.எவ்.வினரும் 6 எல்.ரி.ரி.ஈ.யினரும் கொல்லப்பட்டனர்.

ஈ.என்.டி.எல்.எவ்வுக்கும், எல்.ரி.ரி.ஈ.க்குமிடையிலான மோதலில் 8 எல்.ரி.ரி.ஈ.யினரும், 4 ஈ.என்.டி.எல்.எவ்.வினரும் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்ற அகதிகள் படகுகள் மீது இலங்கை கெலி தாக்குதல் நடத்தியதில் 8பேர் கொல்லப்பட்டனர். 19பேர் காயமடைந்தனர். 30பேர் காணமல் போயுள்ளனர்.

08.02.90 (ஐலண்ட்)

பொத்துவிலில் இருந்து 26மைல்கள் தள்ளியுள்ள கஞ்சிக்குடிச்சியாறு காட்டுப்பகுதிக்குள் ரி.என்.ஏ க்கும், எல்.ரி.ரி.ஈ க்கும் இடையே நடைபெற்ற மோதலில் 137பேர் கொல்லப்பட்டதாக உறுதியற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலையில் ஐ.பி.கே.எவ்வுக்கும், எல்.ரி.ரி.ஈ.க்குமிடையிலான மோதலில் சுமார் 90பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

09.02.90 (தவச)

பொல்வத்த ஆற்றில் ஒன்றாகக் கட்டப்பட்ட நிலையில் 4 பிரேதங்கள் காணப்பட்டன.

09.02.90 (வீரகேசரி)

"வடக்கு-கிழக்கு முதல்வர் வரதராஜப் பெருமாள் இலங்கை அரசாங்கத்திற்கு அறிவிக்காமல் இலங்கை குடிவரவு, குடியகல்வு சுங்கச் சட்டங்களுக்கு மாறாக இந்தியா சென்று திரும்பியுள்ளார். இலங்கையின் சட்டதிட்டங்களை மீறியதற்காக அவரிடம் விளக்கம் கோரப்படும். அவசியம் ஏற்படின் அவர் கைது செய்யப்படலாம்." - பாதுகாப்பமைச்சர்

10.02.90 (வீரகேசரி)

பாண், மா ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. தற்போது ஒரு இறாத்தல் பாணின் விலை ரூபா 4.60ஆகும்.

வெலிகமவில் 4 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

"வரதராஜப் பெருமாள் டில்லிக்குப் போய் இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியதை ஆட்சேபிக்கும் அரசாங்கம், அன்டன் பாலசிங்கமும், யோகியும் கருணாநிதியுடன் பேசியது தொடர்பாக எதுவித ஆட்சேபமும் தெரிவிக்காமல் மௌனம் சாதிப்பது - ஏன்?" -சாம் தம்பிமுத்து

"புலிகளின் வாலை நாம் பிடித்துக்கொண்டிருப்பதாக அதாவுட செனவிரத்ன கூறினார். நாம் எதனதும் வாலைப் பிடிக்க

www.tamilarangam.net

வில்லை. பிடிப்பதானால் நாம் கழுத்தை தான் பிடிப்போம்" - பாதுகாப்பமைச்சர்.

கிரிந்தவலயில் இனந்தெரியாத 8 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

10.02.90 (ஐலண்ட்)

கலபாவில் எரியுண்ட நிலையில் 5 சடலங்கள் காணப்பட்டன.

10.02.90 (சன்)

திக்கந்த நகரத்தில் எரியுண்ட நிலையில் 8 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

12.02.90 (தினரேச)

எல்லாக்கால பண்ணையில் 3 இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு அவர்களின் உடல்கள் ரயர் போட்டு எரிக்கப்பட்டன.

12.02.90 (திவயின)

களனிய ஆற்றில் 6 பிரேதங்கள் காணப்பட்டன.

12.02.90 (வீரகேசரி)
எம்.பி.கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்வது, விடுதலைப் புலிகளுக்கு இடையூறு ஏற்படாதவகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகியவை குறித்து ஈரோஸ் அமைப்பின் பொதுச்சபை கொழும்பில் கூடி ஆராய்ந்தது.

நாவலப்பிட்டி பிரதேசத்தில் 7 இளைஞர்களின் சடலங்கள் அரைகுறையாக எரிந்தநிலையில் காணப்பட்டன.

13.02.90. (வீரகேசரி)

வடக்கு-கிழக்கு மாகாணசபையைக் கலைத்து புதிய தேர்தல் ஒன்றை நடத்துமாறு விடுதலைப் புலிகளின் மக்கள்முன்னணி இலங்கை அரசாங்கத்தைக் கோரியுள்ளது. பெருமாள் நிர்வாகம் கலைக்கப்பட்டு சுதந்திரமான, நீதியான தேர்தல் நடத்தப்படுமேயானால் மாகாணசபை அமைப்பில் பங்குபற்றுவதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய இராணுவத்துக்கும், தீவிரவாதிகளுக்குமிடையிலான மோதல் ஒன்றையடுத்து 18 சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. இச் சடலங்கள் மீதான பிரேத பரிசோதனையில் சைனட் நச்சுத் தன்மையால் மரணம் விளைந்ததாகப் பொலிசார் கூறியுள்ளனர்.

நாடு முழுவதும் 6,767 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

14.02.90 (வீரகேசரி)

தலங்கமை வீடொன்றிலிருந்து 6 சடலங்கள் மீட்கப்பட்டன.

14.02.90 (திவயின)

மிக்கடொவத்தயில் 5 இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு, பிரேதங்கள் எரிந்த நிலையில் காணப்பட்டன.

15.02.90 (வீரகேசரி)

வெள்ளவத்தைப் பொலிசார் வீடுகள், விடுதிகளில் திடீர் தேடுதல் வேட்டையை மேற்கொண்டனர். இளைஞர்கள் கூட்டாக தங்கியிருக்கும் விடுதிகளும், அவர்கள் வசமிருக்கும் உடைமைகளும் பொலிசாரால் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன

வெலிஸ்கிரிய என்ற முஸ்லீம் கிராமம் அனுராதபுரம் புனிதப் பிரதேசத்திலிருந்து மாற்றப்படவிருக்கிறது. சந்ததி சந்ததியக வெலிஸ்கிரியாவில் வாழ்ந்து வருகின்ற முஸ்லீம்களை அங்கிருந்து அப்புறப்படுத்தும் ஆரம்ப வேலைகள் நடந்துகொண்டிரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்கின்றன.

"கடந்த 24மணி நேரத்தில் கொழும்பு நகரில் சோதனை என்ற பெயரில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைதாகியுள்ளனர். இது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்"-தமிழ் காங்கிரஸ்

புரிந்துணர்வுடன் செயற்படுவது தொடர்பாக ஈரோஸ், புலி இயக்க முக்கியஸ்தர்கள் கொழும்பில் சந்தித்துக் கொண்டனர்.

16.02.90 (வீரகேசரி)

கடந்த ஜூன் மாதத்திலிருந்து இதுவரை மாத்தளை மாவட்டத்தில் 223 பேர் காணாமல் போயுள்ளனர்.

16.02.90 (திவயின)

களனிய ஆற்றில் 7 பிரேதங்கள் மிதந்து வந்தன.

மொனராகலையில் மூவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

17.02.90 (டெய்லி நியூஸ்)

பாதுகாப்புப் படையினரால் செடாவத்தையில் 5பேர் கொல்லப்பட்டனர்.

எம்பிலிப்பிட்டியவில் 2சட்டத்தரணிகள் கோரமான முறையில் வெட்டிக்கொல்லப்பட்டனர்.

17.02.90 (தினசே)

அகலவத்தயில் 4பேர் ஆயுதபாணிகளால் கொல்லப்பட்டனர்.

17.02.90 (திவயின)

திருகோணமலை -நாரவேவா பிரதான வீதியில் இனந்தெரியாத பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

17.02.90 (வீரகேசரி)

"தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க மற்றும் தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளும் ஈழப் போராளி இயக்கங்களுக்கிடையிலான படுகொலைகளை நிறுத்தி, தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கமேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ் நிபந்தனையற்ற ஆதரவினை வழங்கும்"-பத்மநாபா

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் போக்குவரத்து வீதி ஒழுங்குகளை நடைமுறைப்படுத்த மட்டக்களப்பு பொலிசார் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

கொழும்பில் கைதான வடபகுதி இளைஞர்கள் மீது தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது. கொழும்புவரும் இளைஞர்கள் தங்கள் வருகையை அவர்கள் தங்கியிருக்கும் பகுதிப் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

18.02.90 (வீரகேசரி)

வவுனியா, மதவாச்சி, மன்னார் வீதிகளை இணைக்கும் பறையனாளங்குளம் சந்தியில் இலங்கை இராணுவத்தினர் வீதிச் சோதனைகளை ஆரம்பித்துள்ளனர்.

பேசாலை, சிலாவத்துறை, அடம்பன் ஆகிய இடங்களில் புதிய பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

19.02.90 (வீரகேசரி)

"வடக்கு-கிழக்கு மாகாணசபையைக் கலைத்து, அங்கு சுதந்திரமான புதியதேர்தல் ஒன்றை நடத்துவதற்கு தமிழர்களுக்கள் அனைத்தும் ஒத்துழைப்பு வழங்க-வேண்டும்"-மு.கருணாநிதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

20.02.90 (வீரகேசரி)

6 ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் மட்டுநகரில் பொலிசார் வீதிக்கடமைகளில் ஈடுபட ஆரம்பித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடி, கும்புறுமூலை, கரடியனாறு, புல்லுமலை, கஜு. வாஞ்சிக்குடி, மங்கள ஓயா ஆகிய இடங்களில் அமைந்துள்ள இராணுவ முகாம்களுக்கு நூற்றுக்கணக்கான இலங்கை இராணுவத்தினர் மேலதிகமாக வந்து சேர்ந்துள்ளனர். வீதித்தடை போடப்பட்டு சோதனையும் மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கை இராணுவத்தினர் பலாலி, - கோட்டை முகாம்களுக்கு கூடுதலாகவந்து சேர்ந்துள்ளனர்.

யாழ் நீதிமன்றங்கள் இயங்க ஆரம்பித்துள்ளன.

"தமிழ்ப் பெண்கள் கூடுமானவரை சேலையையே அணியவேண்டும். வீடுகளில் நிற்கும் சமயங்களில் மாற்றுடையாக பாதம் வரை நீண்டபாவாடை அணிவது விரும்பத்தக்கது. எக்காரணம் கொண்டும் கட்டைப்பாவாடை அணிவது தவிர்க்கப்படவேண்டும். தமிழ் பெண்களின் உடைதமிழ் தேசிய முறையில் கௌரவமானமாக இருக்க வேண்டும்" - தம்பலகாமத்தில்புலிகள் இயக்கப் பேச்சாளர்.

22.02.90 (வீரகேசரி)

சட்டவிரோதமான முறையில் துப்பாக்கிகள் போன்ற ஆயுதங்களை வைத்திருப்போர் அவற்றை மார்ச் 1ஆம் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் ஒப்படைத்துவிட வேண்டுமென பாதுகாப்பமைச்சு உத்தரவு பிறப்பித்தது.

அம்பாறையில் பொலிஸ் சோதனைநிலையம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் தற்கொலை புரிந்ததாக அரசாங்க அறிக்கை தெரிவித்துள்ளது.

இலங்கையை இஸ்ரேலிடம் இருந்து காப்பாற்றிக்கொள்வதற்கான 'மொப்சி' என்ற இயக்கத்திற்கு, இஸ்ரேலிய எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கைவிடும்படி 'சின்பெத்' எனும் இஸ்ரேலிய உளவுஸ்தாபனம் எச்சரிக்கைக் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது.

23.02.90 (வீரகேசரி)

"மார்ச் 1ஆம் திகதிக்கு முன்னர் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் சகலபகுதிகளிலிருந்தும் சட்டவிரோத ஆயுதங்களை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றுவர். இந்த முடிவு குறித்து விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கும். பாதுகாப்புபடையினர் மற்றும் பொலிசார் தவிர வேறு எவரும் ஆயுதங்களுடன் செயற்படமுடியாது" - பாதுகாப்பமைச்சர்.

கல்முனையில் பிரஜைகள் தொண்டர்படை வீரர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

சம்மாந்துறையில் ஈ.பி.ஆர்.எல்.எவ்விலிருந்து விலகிச் சென்றவர் புளொட்டால்சுட்டுக்கொல்லப்பட்டார்.

24.02.90 (வீரகேசரி)

"இலங்கையில் கடந்த வருடம் இறுதி 6 மாதங்களில் மட்டும் 30,000 பேர் கொலைசெய்யப்பட்டுள்ளார்கள். என பிஜன்சியல் ரைம்ஸ் தெரிவித்துள்ளது"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"வடக்கு-கிழக்கில் யாழ்ப்பாணக்குடா- நாடு தவிர்ந்த ஏனைய பகுதிகளில்தான் புலிகள் கடுமையான வரிகளை அறவிடுகிறார்கள். குடாநாட்டில் அநேகமாக வீட்டுக்கு ஒருவராவது வெளிநாட்டில் இருக்கிறார்கள். எனவே வரியை அங்கே அறவிட்டால் வெளிநாடுகளில் அந்த விவகாரம் பரவிவிடும் என்பதற்காக புலிகள் இப்படிச் செய்கிறார்கள்"-மட்டக்களப்பு மாவட்ட எம்.பி

25.02.90 (வீரகேசரி)

வடக்கிலும் கிழக்கிலும் சமாதானம், வழமைநிலைமை, உறுதிப்பாடு ஆகியவற்றை ஏற்படுத்த ஜனாதிபதி மேற்கொண்டுள்ள நேர்மையான, உண்மையான முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் பாராட்டுகளைத் தெரிவித்த மகேந்திரராஜா இந்தக் குறிக்கோளை அடைய தங்களின் முழு ஆதரவையும் நல்கினார்.

ஜனவரி 15ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 14ஆம் திகதிவரை 107பேர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

26.02.90 (வீரகேசரி)

நாட்டின் பல்வேறு முகாம்களிலும் மொத்தம் 10,143பேர் தடுப்புக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பஸ் ஒன்றின் மீது ஜீப்பில் வந்த இனம்தெரியாதவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சுப்பிரமணியம் சரோஜினி என்பவர் கொல்லப்பட்டார்.

---

சுணுக்குகளுக்கான படங்கள் இந்தியச்-சஞ்சிகைகளிலிருந்து எடுக்கப்பட்டவை.

---

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய இராணுவ வெளியேற்றத்துடன் வெளியேறியபகுதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. இவர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதிகளில் இலங்கைப் பொலிசாரும் போக்குவரத்து ஒழுங்கு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இதேநேரம் இப் பகுதிகளிலுள்ள இலங்கை இராணுவ முகாம்களும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. வடக்கு, கிழக்கு பகுதிகளில் இராணுவத்தினரின் எண்ணிக்கையும், இராணுவ முகாம்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப் படுவதோடு இம்முகாம்களுக்கு நவீன ரக ஆயுதத் தளபாடங்கள் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன.

பொதுவாக இந்தியஇராணுவத்தினர் வெளியேறிய பகுதிகளில் புலிக்கொடிகள் பறக்க விடப்பட்டும், அவர்களது இயக்க பாடல்கள் நாடாக்கள் மூலம் இசைக்கப்பட்டும் வருகின்றன.

இளம் யுவதிகள், 18வயதிற்குட்பட்ட 'சிறுவர் இராணுவத்தினர்' வரிபோட்ட காக்கி இராணுவ உடைகளில் துப்பாக்கிகளையும், ரொக்கட்டுகளையும் தாங்கியவண்ணம் தெருக்களில் உலாவுகின்றனர்.

சில இடங்களில் புதிய முகாம்கள் திறக்கப்பட்டுள்ளதுட

www.tamilarangam.net

ன், பாடசாலைகளிலிருந்தும், வீடுகளிலிருந்தும் பலர் புலி இயக்கத்துக்குப் போய் சேர்ந்தவண்ணமிருக்கின்றனர். மீண்டும் யாழ் பழைய பூங்காவில் ஒரு பயிற்சி முகாம் திறக்கப்படவுள்ளது.

இலங்கையின் 42ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நாட்டின் நாலா பக்கங்களிலும் 'சிறப்பாகக் கொண்டாடப்பட்டன'. 5நாட்கள் தொடர்ந்து தேசியக் கொடிகள் பறக்க விடப்பட்டன எனினும் வடக்கு, கிழக்கில் அவ்வாறு காணப்படவில்லை. குறிப்பாக யாழ் மாவட்டத்தில் அரசாங்கச் செயலகம், யாழ் மாநகரசபை போன்றவற்றில் புலிக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. எனினும் இராணுவ, பொலிஸ் முகாம்களில் – வாளேந்திய சிங்கக்கொடிகள்– பறக்கவிடப்பட்டன. மொத்தத்தில் மிருகங்களைத் தாங்கிய – கொடிகளாகவே எங்கும் காட்சியளித்தன.

திருகோணமலை மாவட்டத்தில் பறக்கவிடப்பட்ட தேசிய கொடிகள் இரவோடிரவாக அகற்றப்பட்டன. அதற்கு ரி.என்.ஏ. தான் காரணமெனவும் கூறப்பட்டது. அதேவேளை மட்டக்களப்பு, கல்முனை பிராந்தியங்களில் பறக்கவிடப்பட்ட தேசியக் கொடிகள் புலிகளால் அகற்றப்பட்டதாக தெரிவித்த செய்திகளை மறுத்த புலிகள் ரி.என்.ஏ. யினர்தான் கொடிகளை அகற்றினர் எனக் கூறியுள்ளனர்.

கிழக்கில் முஸ்லீம்களுக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட சில கசப்பான சம்பவங்கள் இறுதியில் முஸ்லீம்– தமிழ் கசப்பினை வளர்த்துள்ளது. வடக்கு, கிழக்கு இணைப்புப் பற்றிய சர்வஜன வாக்கெடுப்புக் காலத்தில் ஐக்கியமின்மை தோன்றுகிறது.

ஐ.பி.கே.எவ், சி.வி.எ எப், ரி.என்.ஏ ஆகியவற்றுக்கும் முஸ்லீம்களுக்குமிடையே இருந்த கசப்புணர்ச்சி ஒருவகையில் புலிகளுக்குச் சாதகமாகவிருந்தது.

கடந்த தேர்தல் காலத்திலிருந்து சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் முஸ்லீம் மக்கள் மத்தியில் ஓரளவு செல்வாக்குப்பெற்றுள்ளதுடன் தேசியக் கட்சிகளின் மறைமுகமான ஆதரவும் அவர்களுக்கு கிடைத்து வருகிறது. குறிப்பாக ஐ.தே.க.வின் ஆதரவு கிடைத்து வருகிறது.

இப்படியான நிலைமையில் புலிகளின் முஸ்லீம் உறுப்பினர்கள்

ஆயுதங்களுடன் முஸ்லீம்களின் பகுதிக்குள் செல்லும்பொழுது சிலரால் தடுக்கப்பட்டனர். ஒருபுலி உறுப்பினர் கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து ஏனைய கடத்தல், கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

*

கடந்த 13.02.90இலிருந்து வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனை போன்ற இடங்களில் தமிழ் இளைஞர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ

www.tamilarangam.net

ர்களில் பலர் மகர, மகசீன் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண விலாசமிட்ட அடையாள அட்டையுள்ளோர் என்ற காரணத்தினால் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கனடாவிலிருந்து வெளிவரும் 'பார்வை' என்ற சஞ்சிகையின் ஆசிரியர், வேறு பல வயதானவர்கள் என்று பலர் தடுத்து வைக்கப்பட்டிருப்போரில் அடங்குவர்.

இதுபற்றி பாதுகாப்பமைச்சர் கருத்து தெரிவிக்கையில், 'றே'வுடன் தொடர்புகொண்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளளிர்.

*

அதிகாலை 3.00மணியளவில் பொலிஸ் உடை அணிந்திருந்த இருவரும், வேறு 3 ஆயுதபாணிகளும் றிச்சட் சொய்ஸா என்பவரின் வீட்டுக்குச் சென்று வீட்டைச் சோதனையிடப் போவதாகத் தெரிவித்தபோது றிச்சட்டின் தாயாரான டாக்டர் மனோராணி சவரிமுத்து கதவைத் திறக்க மறுத்து, அடையாள அட்டையைக் காட்டுமாறு அவர்களிடம் கேட்டார். அவர்கள் காட்ட முடியாது, திறக்காவிட்டால் சுட்டுக் கொல்லுவோம் என்று மிரட்டியதும் பயத்தால் மனோராணி கதவைத் திறந்தார். வீட்டுக்குள் புகுந்தவர்கள் றிச்சட் சொய்ஸாவை இழுத்துக்கொண்டு வெளியேறினார்கள். பின்னர் அவர் சடலமாகக் கடலில் மிதக்கக் காணப்பட்டார்.



"சனங்களுக்கு முன்னால எந்த முகத்தோட போகலாம்?"

றிச்சட் சொய்ஸா ஒரு தொலைக்காட்சி அறிவிப்பாளரும், நடிகரும், பத்திரிகையாளரும், மனித உரிமைப் போராட்ட போராளியுமாவார்.

கடந்த மாதம் தெகிவளை-கல்கிசை நகரசபை உறுப்பினர் லக்ஸ்மன் பெரேரா என்பவர் காணாமல் போனார். இவரால் தயாரிக்கப்பட்ட நாடகமான "இவர் யார்?என்ன செய்கிறார்?" 27.01.90 இல் மேடையேற்றப்படவிருந்தது. இந்நாடகத்தினை எழுதுவதற்கு றிச்சட் சொய்ஸா உதவியிருந்தார்

"இவர் யார்?என்ன செய்கிறார்?"என்ற வாசகங்கள் புதிய ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பிரேமதாசவுக்காக நாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"தாலி கட்டுற நேரமாய் பாத்து மாப்பிள்ளையும், தகப்பனும் எங்க போகினம்?"

"சீதனமாய் குடுக்கிற நிலம் தரிசென்டு ஆரோ கதைச்சிருக்கிறாங்கள். அது தான் மண் சாப்பிட்டுப் பாக்க போகினமாம்"

முழுவதிலும் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளில் இடம்பெற்றிருந்தன.

*

வடக்கு–கிழக்கு மாகாண சபையின் சகல ஊழியர்களையும் மார்ச் 15ஆம் திகதியிலிருந்து ஒரு மாத காலத்துக்கு வீடுகளுக்கு செல்லுமாறு கூறப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. பாதுகாப்பு நிமித்தமும், மார்ச்சில் வடக்கு–கிழக்கு மாகாணசபை கலைக்கப்படவிருப்பதாலுமே இந் நடவடிக்கை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ் ஆகியவற்றின் உறுப்பினர்களும், அவர்களின் குடும்பங்களும் இந்தியக் கப்பல்கள் மூலம் இந்தியா பயணமாகின்றனர்.

*

வடபகுதியிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளை ஏற்றிச்சென்ற படகுகள் நடுக்கடலில் வைத்துத் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன. பலர் கொல்லப்பட்டும், இன்னும் சிலர் கடலில் காணாமல் போயுமுள்ளனர். தங்களை இலங்கை விமானப்படை கெலிகள் தாக்கியதாகவும், இத் தாக்குதல்களில் எல்.ரி.ரி.ஈ.யும் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் மண்டபம் முகாமுக்கு வந்து சேர்ந்த அகதிகள் தெரிவித்துள்ளனர்.

---

இலங்கையிலிருந்து....

**–நமது நிருபர்கள் –**

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கைதிகளின் தீர்ப்பு.

நாங்கள்
குற்றஞ் செய்யாத
கைதிகள்.
நியாயங்கள்
எங்களுக்கில்லை.

வாழ்க்கை
சுவர்களுக்குள்.

நாங்கள்
பிறந்தவுடனேயே
அம்மா அழுதுவிடுவாள்.
அத்தனை கொடுமையானது
எம் வாழ்வு.

சுவர்களை
நாளாந்தம் சுரண்டுகிறோம்.
என்றோ
உடையும் என்ற
நம்பிக்கையில்.

இப்போதெல்லாம்
காட்டுத் தர்பாரில்
பூக்களுக்குக் கூட
நாகதாளிகள்
சட்டமியற்றுகின்றன.

மலர்வதற்கல்ல,
கருகுவதற்கு.



எங்கள் மூச்சுக் காற்றில்
ஒட்சிசனின் அளவைவிட
காபனீரொட்சைட்டின் அளவு
கூடிக்கொண்டே செல்கிறது.

ஒருவேளை
எதிர்காலத்தில்
இதயங்கள்
இயங்க மறுக்கலாம்.

செய்யாத குற்றங்களிற்காக
தண்டனைகள்.
விசாரணைகளில்
எமக்கு நம்பிக்கையில்லை.
நரைத்துப்போன
சட்டங்களின் தீர்ப்புகளைத்
திருத்துவதற்காக
என்றோ எங்களால்
மகஜர்கள் எழுதப்பட்டுவிட்டன.

எழுதப்பட்டவை
எரிக்கப்பட்டாலும் கூட
எங்களால்
சட்டங்கள் திருத்தப்படும்.

எங்கள் குரல்களை
எவராலும்
இனிமேல்
மௌனமாக்கவே முடியாது.

சிவாஜினி

www.tamilarangam.net

# பெண் விடுதலை.

சர்வதேச மகளிர் தினத்தினை சகலரும் ஊர்வலங்கள், கூட்டங்கள் உட்பட்ட உரத்த கோஷங்களுடன் கொண்டாடிவருகின்றனர்.

சஞ்சிகைகள்கூட பெண்கள் பகுதிகளை ஒதுக்கிவிட்டு பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டதாக ஆறுதலடைகின்றன. கூடவே ஐக்கிய நாடுகள் சபையும் ஒரு நாளைத் தன்பங்கிற்கு ஒதுக்கிவிட்டு ஓய்ந்துவிட்டது.

இன்று பெண்கள் சுதந்திரமாக இருக்கிறார்கள்தானே என்பது ஒருசிலரின் வாதம்.

## பாமினி

ஆண்டாண்டு காலமாக அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டுச்-சுரண்டலின் வடிவங்கள் தெரியாமலே சுரண்டப்படுகின்ற அதேவேளை அவற்றை உணர்ந்து செயற்படுவதற்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே இன்றும் உள்ளார்கள்.

பெண்விடுதலை என்பது 20ஆம் நூற்றாண்டில் கல்வி வேலை வாய்ப்பு, வாக்குரிமை பாராளுமன்றம், பிறப்புக் கட்டுப்பாடு, விவாகரத்து போன்றவற்றைப் பெறும் உரிமைக்கான போராட்டமாக அமைந்தபோதிலும் நாம் சகலவற்றையும் - பெற்றுவிடவில்லை.

மாறாக இன்னமும் ஆண்களுக்குக் கீழ்படிதல், குடும்பம், சுரண்டல், தொழில், கலாச்சாரம், சமூகம் யாவற்றிலும் பாரபட்சமான மதிப்பீடு, சம கூலியற்ற-நிலை, பாலியல் வன் முறைகள் தொடர்ந்தவண்ணமேயுள்ளன.

இந்நிலையிலும், பெண்விடுதலையா? இவர்கள் சகல துறைகளிலும் ஆண்களுடன் போட்டி-போட்டு முன்னேறுகிறார்களே? சகல சுதந்திரத்துடனும் நடமாடுகிறார்களே? என்ற முணுமுணுப்புகளையும் கேட்கக் கூடியதாகவுள்ளது.

பெண்கள் கருத்துச் சுதந்திரத்துடன் கூடிய பொருளாதார சுதந்திரத்துடன் வாழவேண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டும் என்றதும் மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்புகள் உல்லாசப் பயணத்துறைகள், சுதந்திர வர்த்தக வலயங்கள் என்பர்.

இவ்வேலை வாய்ப்புகள் ஆரம்பத்தில் தனியே பொருளாதார சுதந்திரத்தை வழங்கிய போதும் உடல்நிலையைப் பாதிப்படையச் செய்கின்றன.

பெண்பாதுகாப்பு சட்டங்கள் அற்ற, நள்ளிரவு போக்குவரத்து சேவையற்ற பல நிலைமைகளில் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள். அத்துடன் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

இவற்றுக்கு சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் முடியாமலேயுள்ளது. வன்முறைகள் பற்றிய வழக்குகளுக்குச் சாட்சியங்கள் தேவைப்படுகிறது. பாதிக்கப்பட்ட பெண்கள் நீதிமன்றம் வழக்குவரை வருவதே மிகவும் கஷ்டமான நிலையில்தான். இந்நிலையில் சாட்சியங்கள் பற்றி எப்படி அறிவிக்க முடியும்?

ஏனைய குற்றங்களைப் - போல பாலியல் பலாத்காரங்கள் நடைபெறுவதில்லை. இதற்கான சாட்சியங்கள் தேடுவது படு பிற்போக்கானதே.

இவ்வன்முறைகள் பற்றி வெளியில் சொல்லும் பெண்கள் எமது சமூகச் சூழலில் திருமணம் ஆகாதவர் எனில் திருமணம் செய்வதற்கான சாத்தியப்பாடுகள்



"என்ன அதிசமாயிருக்கு? என்ரை உடுப்புகளையே தோய்க்க வெளிக்கிட்டிட்டியள்? இருந்தாப்போல ஒரு நல்ல மாற்றம் வந்திருக்கு"

"மாற்றமுமில்லை. கீற்றமுமில்லை. பெண் விடுதலை சம்பந்தமாய் நான் எழுதின கட்டுரையளைப் பத்திரிகை லந்தனைரையாட. இப்ப கொஞ்ச நேரத்தால ஆக்கள் வருவினம். அதுதான். அவை போகும்வரைக்கும் நீ ஒருவேலையும் செய்யாதை"

"பிறகு?"

"இதென்ன கேள்வி? உன்ரை வழக்கமான வேலையளை நீதான் செய்ய வேணும்"

தடுக்கப்படுகிறது. திருமணமான பெண் எனில் குடும்பத்தில் விரிசல், சமூகத்திலிருந்து தள்ளிவைக்கப்படுதல் போன்ற சித்திரவதைகள்.

பெண்கள் தொழிற்சாலைகள், தோட்டங்கள் உட்பட பலவற்றில் குறைந்த சம்பளத்துடன்

www.tamilarangam.net

வேலை செய்ய நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள்.

அத்துடன் வீட்டுவேலைகள் சகலவும் இயந்திரமாக செய்யவேண்டிய தேவையுடன், இனமறு உற்பத்தியிலும் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவைகள் பற்றி யாரும் ஒருபோதும் கணக்கில் எடுப்பதேயில்லை.

இவைகள் போதாதென்று விடுதலையை வென்றெடுப்பது தமது கடமையென ஏகபோகவுரிமை கொண்டாடுபவர்களும் கூடவே பல சட்டங்களைக்கொண்டு வந்துள்ளனர்.

பெண்கள் கலாச்சாரரீதியாக அடக்கப்படுகிறோம் என்பதைப் பற்றிப் பேசுவது கூட கேலிக்குரியதாகிறது.

இந்நிலையில் சமுதாயமாற்றத்தின் பின் பெண்களுக்கு சம உரிமை கிடைத்துவிடும், வளர்ந்து வரும் முதலாளித்துவ அமைப்பு குடும்பம் என்ற கட்டமைப்பினை அழித்து முதலாளித்துவத்தின் முடிவிலான சமதர்ம சமூகத்தில் - பெண்கள் சகல சுதந்திரங்களும்

பெறுவர். உற்பத்தியில் முழுமை-யாக ஈடுபடுவார்கள் என்றபலரது தத்துவ ஞானங்களும் முட்டிமோதுவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. மேற்குறிப்பிட்ட மாற்றங்கள் 'மட்டுமே' ஏற்பட்டால் பெண்கள் விடுதலை கிடைத்துவிடுமா?

காலம் காலமாக கட்டுப்பாட்டுக்குள் வளர்க்கப்படுவதனால் அக் கருத்துகள் ஆழமாகப் பதிந்துள்ளன.

பெண்கள் பற்றி ஆண்களின் கருத்தும், ஆண்கள் பற்றிப் பெண்களின் கருத்தும் மாற்றப்படவேண்டும். புதிய கலாச்சாரத்தின் தோற்றத்திற்காக உழைக்க வேண்டும். புதிய கலாச்சாரத்-தோன்றலின் மூலம் கலாச்சார ரீதியான ஒடுக்குமுறை வடிவங்கள் ஒழிந்து போகலாம்.

கருத்துகள் மட்டுமே சுதந்திரத்தை வழங்கமாட்டாது. கூடவே சமூக மாற்றத்திற்கான பணிகளில், புதிய சமூகத்தின்தோற்றத்திற்காக இருபாலாரும் - உழைக்க வேண்டும்.

---



வாசகர் கடிதம் பகுதியில் 'பணத்தையடிப்படையாகக்கொண்ட திருமணங்களுக்குதான் பாசகாப்பு அவசியம் என்று குறிப்பிட்ட அந்த வாசகரே பின் புரிந்தனை

www.tamilarangam.net

ர்விருந்தால் சட்டம் எதற்கு?என்று கேட்டுள்ளார்.

பணத்தை அடிப்படையாகக்கொண்ட இன்றைய சமுகத்தில் சட்டரீதியாகத் திருமணங்கள் நடைபெறுவதை தவிர்க்க முடியாதது. மனிதரை மனிதர் நேசிக்கின்ற சமுக அமைப்பில்தான் புரிந்துணர்வுடன் திருமணங்கள் நடைபெறலாம்.

இதே வாசகர் அடுத்த பந்தியில் குறிப்பிட்டுள்ளவற்றைவிடவும் வேறு பல பெண்ணடிமைத்தனங்கள் இக் கலத்தின் ஏனைய ஆக்கங்களில் இடம்பெற்றுள்ளன.

<u>பெண் விடுதலை</u>

இக் கட்டுரையில் '... மத்திய கிழக்கு நாடுகளில், சுதந்திர வர்த்தக வலயங்களில் வேலைசெய்பவர்கள் பொருளாதார சுதந்திரத்தைப் பெற்றுள்ளனர்.' என்ற கருத்துப்பட்டக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் பணிபுரியும் பெண்கள் வீட்டுக்குக் கூட கடிதங்கள் எழுத முடியாதபடி எஜமானர்களால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். மத்திய கிழக்கில் பணி புரியச் சென்ற பல பெண்களைப்பற்றிய எந்தத் தகவல்களுமே இல்லாத நிலையில் இலங்கையிலிருக்கும் அவர்களின் குடும்பத்தினர், உறவினர் கலங்கிப் போயிருக்கிறார்கள். இந்நிலையில் அப் பெண்களுக்கு 'பொருளாதார சுதந்திரம்' வழங்கப்பட்டுள்ளதாக எப்படிக் கூறமுடியும்?

இடமின்மையால் இக்கலத்தில் இடம்பெறாமல்போன தொடர் ஆக்கங்கள் அடுத்த கலத்தில்.

# கேள்வி பதில்

? நெல்சன் மண்டேலாவின் விடுதலைக்கு ஏதாவது பின்னணிகள் உண்டா? சந்தேகமாகவுள்ளது!

—எஸ். ராஜன்

! விடுதலைப் போராளிகளுக்கு கொடுக்கப்படும் சர்வதேச வரவேற்பு, அந்தஸ்து என்பவை ஒரு சில யாஸீர் அறபாத்துகளைத் தோற்றுவிக்கும்.

ஆனால் நெல்சனின் சார்பில் இதுவரை அப்படி எதுவும் தெரியவில்லை. மண்டேலா தொடர்பான சர்வதேச நெருக்கடிகள் தரும் சிரத்தை அளவுக்கு நெல்சனின் விடுதலை தாக்கமானதல்ல என அரசு கருதி இருக்கலாம். இதற்கான பதிலை எதிர்காலத்துக்கு விட்டுவிடுவோம்.

**பதில்கள்: பரதேசி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



"முகம் சுழிக்காம, ஒரு எதிர்ப்பு காட்டாம எப்பிடி உங்களால சீவிக்கேலுது?"

"எல்லாம் என்ரை அம்மாவைப் பாத்து பழகினதுதான்"

? சர்வதேச மகளிர் ஆண்டு, மகளிர் தினம் பற்றி என்னகருதுகிறீர்கள்?

— இ. நிர்மலா

! ஆண்கள் என்ற அமைப்பின் உதிரிகளான அங்கவீனர்கள், குழந்தைகள், விளையாட்டு வீரர்கள்... என்பன போல பெண்களையும் உதிரியாகக் கருதுகிறேமே தவிர, ஆணைப் பெண்ணிடமிருந்து வேறுபடுத்திப் பார்க்காத தன்மை இதுவரை வளரவில்லை என்பதை உலகளாவிய வடிவத்தில் காட்டும் ஒரு நடைமுறை.

வருடா வருடம் அதே குழியில் மரம் நாட்டுகின்ற மரநடுகை இயக்கம் போலவே வருடாவருடம் விழா எடுக்கும் ஒரு அமைப்பு.

? பெண்கள் நீளப்பாவாடையும் சாறியும்தான் அணிய வேண்டும் என இலங்கையில் வலியுறுத்தப்படுகின்றனராம். அதேவேளை கலாச்சாரக் குரூரத்தைக் கதைகளாகவும், கட்டுரைகளாகவும், கலர்ப்படங்களாகவும் தரும் திரைச்சித்திரா, கோடை, மருதம் என்னும் சஞ்சிகைகள்ஐரோப்பிய தமிழர்கள் மத்தியில் உலவவிடப்படுகின்றனவே. ஏன்?

— சிறி

! இலங்கையில் அத்தகைய க்ருத்து வெளியிட்டிருப்பதைப்பற்றிய விமர்சனங்கள் பரவலாக எழுந்துள்ளது ஒருபுறமிருக்க, இங்கோ அவர்களின் பிரதிநிதிகளின் கவனம் 'வேறு விடயங்களில்தான்' என்பது சரிபோலிருக்கிறது

ஏன் விடப்படுகின்றன என்று கேட்டீர்கள். 30பெனிக் லாபம் என்பதற்காக இவ்வாறன கருத்துகளை விற்க முன்வந்த விற்பனையாளர்கள் 30 மார்க் கிடைக்குமாயின் வீட்டு நடைமுறைகளையும் விற்பனை செய்வார்கள். மொத்தம் லாபம்தான்.

? பரதேசியாரே, ஐரோப்பாவின் தமிழ்ப் படைப்புகள்என

www.tamilarangam.net

இதுவரை எத்தனை வளர்ந்துவிட்டன?

— யோ. நி. அன்ரன்

! ஐரோப்பிய நாகரீகம்தொடர்பாக ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் கைநூலாக்கப்பட்டுள்ள ஒரு ஆய்வு நூலும் எதையும் எழுதித் தாருங்கள் கீழேஎங்கள் முத்திரை இருந்தால் போதும் என அச்சிட்டு வெளியிடப்பட்ட ஐரோப்பிய எழுத்தாளர்கள் சிலரின் ஒன்ருக வெளியிடப்பட்ட நான்கைந்து கவிதை, சிறுகதைத் தொகுப்புகளும்...

பிறந்தும், வளர்ந்தும், நடந்தும், ஓடியும், தொடர்ந்தும், இறந்தும் என சுமார் 20க்கு மேற்பட்ட சஞ்சிகைகளும் உலாவந்துள்ளன.

எத்தனை என்ற எண்ணிக்கையல்ல பிரதானமானது. எத்தகைய விடயம், யாருக்காகச் சொல்லப்படுகிறதென்றும், அவ்வாருகஒரு நோக்குள்ளவை சேர்ந்து பலம் பெற்ற ஒரு அமைப்புக்குள் வருவதும் நல்லது என நினைக்கிறேன்.

? நண்பரோ? அல்லது நண்பியோ? மன்னிக்கவும். எனது கேள்வி இதுதான். கருத்து முதல் வாதம், பொருள் முதல் வாதம் என்றெல்லாம் இவர்கள் குழப்பியடிக்கிருர்களே அதன் விளக்கத்தை மிக எளிமையாகத் தர முடியுமா?

— யோகமுத்து

! வேத நூல்கள் சொல்வது போல இது 'இறைவனுல் அருளப்பட்டது' என்று இல்லை. நீங்கள் சென்ற கலத்திலும் இப்படி ஒரு கேள்வியைச் சற்றுப் பயத்தோடு கேட்டிருந்தீர்கள்.

நண்பரே, இது ஒன்றும் பெரியவிடயமல்ல. நெக்கற் பறக்கின்ற விஞ்ஞான விதியே அப்பிள் பழம் விழுவதை அவதானித்து வந்ததுதான்.

சமூக விதிகளும் அவ்வாறே. மனித நடவடிக்கைகளை அவதானித்த ஒரு தொகுப்பின் முடிவு.

கூரான கற்கள், முட்கள் தன்னை ஊனப்படுத்துவதைக் கண்ட மனிதன் தனது உணவுக்காக அல்லது பாதுகாப்புக்காக ஏனைய விலங்குகளை அல்லது கூட்டத்திலுள்ள சக மனிதனை ஊனப்படுத்துவதற்கு இவைகளைப் பாவிக்கலாம் என்ற முடிவுக்கு வருகிருன்.

மேலும் அவனுடைய முன்னேற்றம் பறவைகளை ஆய்வு செய்கிறது. தானும் பறக்க முடியும் என்ற முடிவுக்கு வரும்போது விமானம் பிறக்கிறது.

எனவே கூரான கற்கள், முட்கள், பறவைகள் போன்ற பொ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருட்களை முதன்மையாக வைத்தே மனிதனின் கருத்து (சிந்தனை) எழும்போது சகலதுறைகளிலும் அரிய, பெரிய படைப்புகளோடான உலகம் உருவாகி நிற்கிறது.

இப்படிப் பொருட்களை முதன்மைப்படுத்திச் சிந்திப்பதுதான் பொருள் முதல்வாதம் அல்லது பொருள் முதல்வாதச் சிந்தனை எனலாம்.

இதற்கு நேர் எதிரானதை அதாவது எந்தப் பொருட்களையோ, இறுதியான முடிவுகளையோ எடுத்துக்கொள்ளாமல் தன்னிச்சையாக தனது கருத்துகளிலிருந்து ஒரு முடிவுக்கு வருவதை கருத்தை முதன்மைப்படுத்தும் – வாதம் அல்லது கருத்து முதல் வாதம் என்பர்.

உதாரணமாக, மேகத்தைப் பார்த்தோ அல்லது காலநிலை அறிவிப்புகளைக் கணக்கிலெடுக்காமலும் ஒருவர் தான் குடையை பிடித்தால் மழை வரும் எனத் 'தன்னிச்சையாக கருதுவதினால்' மழை வந்துவிடுவதில்லை.

கருத்து முதல்வாதம் என்றுமே பொருள் முதல்வாதத்துக்கு நேரான எதிரி. அநேகமாக எல்லாச் சந்தர்ப்பங்களிலும் – பொருள் முதல்வாதத்திடம் தோல்வி காண்பதும், பொய்யாகிவிடுவதும் இதன் இயல்புகள்.



"செய்த வேலைக்கு சரியா எண்டில்லாட்டிலும் ஏதோ கூலியெண்டு தாறாங்கள். ஆனா இருபத்திநாலு மணித்தியால் வேலை செய்தாலும் உங்களுக்கு கூலியே இல்லையெண்டு சொல்லுறியள்?"

"அதுதான் ஒரு தொழிலாளிக்கும், பெண் சாதிக்கும் உள்ள வித்தியாசம்"

– சின்னன்ரு –

www.tamilarangam.net

சிறுகதை

# கனவுகள்.... வெடிகள்....

வயல் நிரம்பிய ஓர் இயற்கைச் சோலையுடன் கூடியஐம்பது வயதை எட்ட வேண்டிய கிராமம். ஆனாலும் குழந்தைப்பருவத்திலேயே இருந்தது.

கிராமம் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தது.

வீதியோரமாகவுள்ள யோகனின் வீட்டு வளவில் வீமன் அவலத்துடன் கூடிய சத்தம் போட்டுக் கொண்டிருந்தது.

சுருண்டு படுத்துக் கிடந்த யோகன் ஏதோ வருவதுபோல் சத்தம் கேட்டதால் வீமனின் குரலுக்குச் செவிமடுத்தான்.

ரோட்டில் பலத்த சத்தங்கள். இராணுவமா...? பெடியளா..?

வீமனைக் கூப்பிட்டு தான் கட்டியிருந்த சாறத்தால் அதன் வாயைப் பொத்தியவாறே வேலியோரமாக நின்று காதை கொடுத்தான் யோகன்.

"ஓவர்.. ஓவர். நான் கதைக்கிறன். சந்தி சரியா?"

"........."

"சந்தியில ஆரடா நிக்கிறது?"

"......."

"முன்னுக்குப்போடா"

"எங்கையடா என்ரை ஏகே?"

அதிவிசேட கலைச்சொற்களுடன் கூடிய வார்த்தைகள் எதையோ பரிமாறிக்கொண்டன

கிராமத்துக்குள் ஏதோ ஓர் இயக்கம் நுழைகிறது என்று யோகன் யோசித்துக் கொண்டு நிற்கும்போது 'இயக்கம்' இவன் வீட்டு எல்லையைத்தாண்டிவிட்டது

இப்போது வீமனுக்கு சுதந்திரம் கொடுத்து தூங்க விட்டான். அவனுக்குத் தூக்கம் வரவில்லை. பல கேள்விகளுடன் விழித்துக் கொண்டேயிருந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யார் இவர்கள்...?

ஏன் வந்தார்கள்...?

இதுபற்றி அவனால் சாதாரணமாக நினைக்க முடியவில்லை அவன் ஓர் 'சூடு கண்ட பூனை' முன்பு விடுதலை இயக்கங்களின் அமாவாசைக்கு தமிழ் ஈழம் தீபாவளிக்குத் தமிழ் ஈழம்என்ற கவர்ச்சி வார்த்தைகளால் சீனிப் பேணிக்குள் துண்டெழுதி வைத்து விட்டு சென்றவன்தான்.

தான் எதிர்பார்த்து சென்றவையெல்லாம் தான் இணைந்திருந்த இயக்கத்தினாலேயே சுக்குநூறாக்கப்பட்டு, இயக்கங்களிடையே ஏற்பட்ட பதவி, பணப் போட்டிகளினால் பல தோழர்களைப் பலிகொடுத்து, அனுபவத்தை மட்டும் பெற்றுக்கொண்டு விலகி வந்துவிட்டான்.

யோகனால் நித்திரைகொள்ள முடியவில்லை. கோழிகள் கூவத் தொடங்கியபோது இது பற்றி யாரிடம் கேட்டறிவதென நினைத்தவாறே தூங்கிப்போய் விட்டான்.

விடிந்துவிட்டது.

வேப்பங்குச்சியைச் சப்பி கொண்டபோதுதான் இரவுச் சம்பவம் யோகனுக்கு நினைவுக்கு வந்தது.

இதுபற்றி அறிய சேகரத்தாரிடம் அல்லது வாசிகசாலை சந்திக்குப் போக வேண்டும்.

அவசர, அவசரமாகஅவன் தன்னுடைய சங்கீத ராசன் சைக்கிளையும் எடுத்துக் கொண்டு செய்திப் பரிமாற்றம் நிகழும் இடத்துக்கு விரைந்தான்.

அவன் நினைத்தபடி சேகரத்தார்தான் எல்லாருக்கும் விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தார்.

யோகன் கூட்டத்தை நெருங்கினான்.

"ராவுக்குப் பெடியள் காட்டுக்குள்ள ரெண்டு அடிச்சிருக்கப் போறாங்களாம். இப்ப ரவுணுக்க பாதுகாப்பு குறைவாம். அதோடதான் வந்தவங்களாம்" என்றார் சேகரத்தார்.

---

## செ. கதிரவேலு

---

யோகனுக்கு சேகரத்தாரைப் பிடிப்பதில்லை. வயதுக்கு மூத்தவராக இருந்தாலும் இவன் கண்ட காலம் முழுவதும் கடுதாசிக் கூட்டமும், வீண்பேச்சுந்தான் அவர் தொழில். தலைமயிர், உடுப்புளதுவுமே குழம்பாமல், கசங்காமல் எம்.ஜி.ஆர் பத்துப் பேருடன் சண்டை போடுவதைப் பார்த்துப் புகழ்ந்து தள்ளியவர் இப்போது பெடியள் வந்துவிட்டார்கள், தனக்கு, அடி, வெடியென்று கதாநாயகர்களை மாற்றி கொண்டு அவர்களின் வீரசாகசங்களைப் புளுகித் திரிந்துகொண்டிருந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டுக்குள் வந்து முகாமிட்டவர்கள் இரண்டு நாட்களின் பின் அந்தக் கிராம ரோட்டுகளில் ஜீப் ஓட்டம், மோட்டச்சைக்கிள் ஓட்டம் என்று பல விந்தை ஓட்டங்கள் காட்டினார்கள்.

கிராம மக்களுக்கு ஒன்றுமே புரியவில்லை.

யாரை யார் கேட்பது? எல்லோர் முதுகிலும், இடுப்பிலும் துவக்குள், கிரனேட்டுக்கள் தொங்கிக் கொண்டிருந்தனவே.

இப்படியே மூன்று மாதங்கள் ஓடி மறைந்துவிட்டன. இந்தக் காலங்களில் வீடுகளிலிருந்து சாப்பாடு, தேங்காய், இளநீர் அரிசி என்று காடுகளுக்குப் போய்க்கொண்டிருந்தது.

ஒருநாள் பாலனின் வீட்டுக்கு யோகன் போனபோது அந்தவீட்டிலிருந்து சில புது முக இளைஞர்கள் வெளிவருவதைப்பார்த்தான்.

"பாலன் எங்க?" யோகன் தன்னை எதிர்கொண்ட பாலனின் மனைவியிடம் கேட்டான்.

"அவர் காட்டுக்குப்போட்டார்"

"உவைஎன்னவாம்?"

"வெள்ளிக்கிழமை சாப்பாடு தரவேணுமாம்"

வந்தவை பச்சை மண்ணும், சுட்ட மண்ணும் மாதிரித்தானே மக்களோட என்று எண்ணிக் கொண்ட யோகன் மாலதியைப் பார்த்தான்.

'காது, மூக்கு எல்லாத்தையும் தென்னை ஈக்கு நிரப்பியிருக்கு. வயித்திலை குழந்தை வேற. அவை ஓடர் போட்டிட்டுப் போகினம்' யோகன் சினந்து கொண்டான்.

பாலனுடைய தகப்பனார் நல்ல மனிதர். சுற்றியுள்ள பெரிய காணி முதலாளிகள் கிராமத்து மக்களைக் கசக்கிப் பிழிந்து வேலை வாங்க கசிப்பு, கஞ்சா என்று அறிமுகம் செய்து வேலை வாங்கினார்கள்.

இப்படியான முதலாளிகளின் சூழ்ச்சிகளில் அகப்பட்டுத்தான் பாலனின் தந்தை கனசபை-யிடம் வயற்காணி, வீட்டுச் சமான்களை அடைவு வைத்து குடிக்க ஆரம்பித்து, குடல் கருகி இறந்து போனார்.

பாலன் காட்டில் மரம் தறித்து ஐந்து பிள்ளைகளுடனும் மனைவியுடனும் சீவியம் நடத்திக் கொண்டிருந்தான்.

'இதுக்குள்ள புட்டு அவிக்கச் சொல்லிப்போட்டுப் போகினம்'.

கதவைத் திறந்து வெளியேறி ரோட்டுக்கு வந்தான்யோகன்.

'முந்தி அஞ்சு வருசத்துக் கொருக்கா தங்கட தேவைக்-காய் வாற அரசியல் வாதியள் மாதிரி, முதல் ரவுண் எண்டாங்கள். இப்ப கிராமம் எண்ணுறாங்கள். ஏன் இந்தச் சனங்களை இப்பிடியே ஏமாத்துறாங்கள்?'

www.tamilarangam.net

வீட்டுக்கு வந்தவனுக்குத்-தாய் சாப்பாட்டைப் போட்டு குடுத்துவிட்டு, "தேங்காய் புடுங்கி வையன். நாளைக்கு சந்தையெல்லே" என்று ஞாபகப்படுத்தினாள்.

"ஓம். கொக்கத்தடி எங்கையணை?"

"பக்கத்துவீட்டில வாங்கினவை"


சாப்பாட்டை முடித்தபின் கொக்கத்தடியை வாங்கிக்கொண்டுவந்த யோகன் பின் வளவை நோக்கி நடக்க ஆரம்பித்த - போது தகப்பன் இடைமறித்தார்.

"தேங்காயை நான் படுங்கிறன். நீ ஒருக்கா வயலுக்குப் போய் தண்ணி பாத்து வா" என பொறுப்பை மாற்றிக் கொண்டு யோகனை வயலுக்கு அனுப்பினார்

கொக்கத்தடியுடன் அவர் பின்வளவுக்கு நடந்தபோது வீமன் குலைத்துச் சத்தம் கேட்டது

'பாம்பு, கீரியைக் கண்டிட்டுதாக்கும்'

இவரைக் கண்டதும் வீமன் இன்னும் உரமாகக் கத்தியது. இவர் புரியாமல் நெருங்கிப்போகும்போது மரத்திலிருந்து தேங்காய்கள் விழும் சத்தம் கேட்டது.



ஓவியம், நன்றி: தமிழீழம்

www.tamilarangam.net

ஆச்சரியத்துடன் இன்னும் விரைவாகப் போனூர். வீமன் குலைத்தபடி வாலை ஆட்டிக் - கொண்டுவந்தது. இப்போதுதான் ஒரு தென்னையைச் சுற்றி சிலர் நிற்பதைப் பார்த்தார்.

"ஆர் தம்பி நீங்கள்?"

"நாங்கள் இயக்கம் அப்பு" முரட்டுத்தனமாகப் பதில் வந்து விழுந்தது.

அவர் மூச்சை மட்டும்விட்டுவாயை மூடிக்கொண்டார்.

எசமான் சுதந்திரத்தைப் பறிகொடுத்து சும்மா நிற்பதை அறிந்துகொண்ட வீமன் கூடுதல் சுதந்திரத்தை எடுத்து பயங்கரமாகக் குலைத்தது.

"மச்சான் நாய் விடுகுதில்லை. அரியண்டமாய் கிடக்கு. தட்டவே?"

"தட்டு"

அடுத்தகணம் வீமன் தரையில் ரத்த வெள்ளத்தில் இருந்தது.

திடுக்கிட்டுப்போன யோகனின் தந்தை கலங்கியபடி வீட்டுக்குத் திரும்பி வந்தார்.

வயல் பார்த்துவிட்டு திரும்பிய யோகன் நடந்தவைகளை தந்தை சொல்லக் கேட்டான்.

'மனுசரே தட்டிக் கேக்கேலாமல் மாண்டு கொண்டிருக்குதுகள். வீமன் மட்டுமென்ன விதிவிலக்கே? ஐயா தப்பினதே அருந்தப்பு' யோகன் தனக்குள் சி[...] தாக நிம்மதியடைந்தான்.

*

பாலன் காட்டுக்குள்ளிரு[...]து சற்றுத் தாமதமாக வந்து, கோடாலியைக் கீழ் இறக்[...] மாட்டுக்குப் புண்ணுக்கு குழைத்[...] கொண்டிருக்கும்போது, இடுப்பில் பிள்ளையுடன் வந்த மாலதி "என் இவ்வளவு நேரம் பிந்தி வாற[...]யள்?" என்றுள் கவலையுடன்.

"ஒரு லொறி போமிற்[...]லை ரண்டுதரம் பிறகு ஏத்தினனுங்கள். முதலாளியின்ரை மச்சானுக்கும், வேறை சொந்தக்காறருக்கும் பிறகோட வீட்டுக்கு மரங்களும் ஏத்தினனுங்கள். அதுதான் நேரம் போட்டுது. சரியாய் பசிக்குது" பாலன் நன்றுகவே க[...]ளைத்துப் போயிருந்தான்.

"மாடுகளுக்கு தண்ணி, தவி[...]டெல்லாத்தையும் வைச்சிட்டு வாங்கோ. சாப்பாடு போட்டு வைக்கிறன்" மாலதி வீட்டுக்குள் போனுள்.

அலுவல்களை முடித்துவிட்டு பாலன் சாப்பிடக் குந்தினன்.

"பெடியள் வந்திட்டுப் - போகினம். அடுத்த கிழமை எங்கட முறையாம். புட்டு வேணுமாம்" மாலதி பரிமாறியபடி கூறினுள்.

"ஓம் எண்டு சொல்லா - தையுமன். பெடியள் இப்பதான் வண்டிலை விலத்திக்கொண்டு காட்டுக்க போறுங்கள்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

மார்ச் 1990 இலம்: 27

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ........... தென்னாசிய நிறுவனம்

முகவரி ........... THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.

## சந்தா விபரங்கள்

மேற்கு ஜேர்மெனி: 6 மாதங்கள் - 20,- டி.எம்
1 வருடம் - 38,- டி.எம்

சந்தா அனுப்பி வைக்க வேண்டிய வங்கி கணக்கு இல. 571 001 799
Stadt Sparkasse Dortmund
BLZ 440 501 99

ஐரோப்பிய நாடுகள்: 6 மாதங்கள் - 25,- டி.எம்
1 வருடம் - 48,- டி.எம்

ஏனைய நாடுகள்: 1 வருடம் - 45,- யு.எஸ்.டொலர்

சந்தா அனுப்பி வைக்க வேண்டிய தபால் கணக்கு இல.30807468
Postscheckamt Dortmund
BLZ 440 100 46

சந்தா அனுப்பியதும் அவ்விபரத்தைக் கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனால் காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

நன்றி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"உங்களுக்கு விசரே?வயித்தில பிள்ளை. இடுப்பில பிள்ளை உவ்வளவு பெருக்கும் புட்டவிக்கிறதென்னெண்டு?"

"அடுத்த வெள்ளிக்கிழமை ஒரு நாள் முதலாளியிட்ட லீவு கேட்டுக்கொண்டு வாறன்"

"லீவெண்டாப் போல சரியே?புட்டுக்கு மா..?பிள்ளைக்கு மா..?"

"கருவாடு கிடக்கே?"

"ஓம்"

"அப்ப சம்பலும், சொதியும். போதுந்தானே?"

கைகழுவும்போது பாலன் தனக்குள் ஓர் கணக்குப் போட்டுப் பார்த்தான். தவிடு, புண்ணாக்கு, வீட்டுச் சாமான்கள்...என பட்டியல் நீண்டது.

ஒரு லொறி விறகு கூடத் தறிக்க வேணும். சரி பிரச்சினையில்லை என்று எண்ணிக்கொண்டு பிள்ளைகளுடன் சிறிது நேரம் விளையாடிவிட்டுத் தூங்கச் சென்றான்.

*

"யோகன். எடேய்..." தாயின் குரல்.

"என்ன?"

"வாழைப்பொத்தியும், குப்பைக் கீரையும் திண்டு அலுத்து போச்சடா. இண்டைக்கு உதில சந்தைதானே?போய் கோவாவீற்றூட் ஏதேன் வேண்டியாவன்"

தாயின் விருப்பத்தை ஏற்றுக்கொண்ட யோகன் தன்னுடைய சங்கீத ராசனையும், சாக்குப் பையையும் எடுத்துக்கொண்டு பிரதான வீதி என்று முன்பு அழைக்கப்பட்ட வீதிக்கு வந்தான்.

அது இப்போது வீதியாக இல்லை. பதினைந்து, இருபது வருடங்களாக கல்லு, தார், மண் எதுவும் சேர்க்கப்படாததால், அது தானாகவே ஓர் தீர்மானத்திற்கு வந்து கல்லுக் கும்பி, மண் கும்பியாக தன்னாலியன்றவரை உதவிக் கொண்டிருந்தது.

வீதியில் யோகனின் சங்கீதராசன் ஒரு இராகம் இசைக்க, அவன் ஆடிய ஆட்டமென்ன என்ற படப்பாடல் மெட்டில் "ஆடிய அட்டம் என்ன, தேடிய செல்வம் என்ன, செய்த கொ-லைகள் என்ன, விட்ட அறிக்கைகள் என்ன" என்று தானாக இயற்றிப் பாடிக் கொண்டிருந்தான்

வளைவில் திரும்பும்போது மேற்கத்திய இசை தோன்றி இவன் பாடலைக் கொலை செய்தது.

யோகன் தனது பாடலை நிறுத்திவிட்டு கூர்ந்து கவனித்தான்.

ரோட்டில், எதிரே வாகனங்கள். மோட்டார் சைக்கிள்கள்

'ஓகோ. இயக்கம் வருகுது'

(மிகுதிப்பகுதி அடுத்த கலசத்தில்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்